# கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

# KARKATHAR OPPURAVU


| மலர்–17, இதழ் – 6 | வைகாசி திங்கள் | விலை ரூ. 25/– | ஆண்டு சந்தா ரூ. 300/– | தமிழ் மாத இதழ் |
|---|---|---|---|---|
| Volume - 17, Issue - 6 | May 2026 | Price Rs. 25/- | Annual Subscription Rs. 300/- | Tamil Monthly |




"Delivered by India Post"

www.indiapost.gov.in

THE KNEE INSTITUTE
RESTORING MOVEMENT
By
Parvathy Hospitals

# சிகிச்சைக்குப் பிறகும் முழங்கால் வலி கவலையா?




கவலை வேண்டாம்...
வலி இனி இல்லை!

**KINEMATICALLY ALIGNED KNEE REPLACEMENT**
மூலம் சிறந்த தீர்வு.

- அதே நாளில் டிஸ்சார்ஜ்
- அறுவை சிகிச்சைக்குப் பின் (பிசியோதெரபி) தேவையில்லை

## எங்கள் சிகிச்சையின் சிறப்புகள்

- சர்வதேச அளவில் பயிற்சி பெற்ற அறுவை சிகிச்சை மருத்துவர்கள்
- அடுத்த நாளிலிருந்து குளிக்கலாம் – இயல்பான வாழ்க்கை தொடரலாம்
- குறைந்த வலி – சிறந்த சிகிச்சை முறை
- ஸ்டேபிள்ஸ் / தையல் அகற்றம் இல்லாத சிகிச்சை

**எங்களிடம் சிகிச்சை பெறும் நோயாளர்களில் 95% பேர் 10 முதல் 30 மணி நேரத்திற்குள் நலம் பெற்று வீடு திரும்புகின்றனர்.**


மேலும் தகவல்களுக்கு: பார்வதி ஆர்த்தோ மருத்துவமனை பிரைவேட் லிமிடெட்

தொலைபேசி: 044 2238 2248 இணையதளம்: www.parvathyhospital.com/knee-institute

241, GST சாலை (MIT மேம்பாலம் பாலம் அருகில்), குரோம்பேட்டை, சென்னை – 600044


DAC
DREAM ASCEND CONQUER
KAIZEN
NOT JUST THEMED
TRULY JAPANESE LIVING
LAUNCH
COMMENCING SOON
Starting From
₹2999
Pre Sq.Ft.
INTRODUCTORY PRICE
288
PLUG & PLAY PLOTS
METRO. AIRPORT. HIGHWAY.
YOUR PLOT IS ALREADY THERE
Located Bang On CHENNAI-BANGALORE HIGHWAY
SUNGUVARCHATRAM
AMENITIES CRAFTED FOR A ZEN LIFESTYLE.
Grand entry
LED street lights
Bitumen pavements
Compound wall
Multipurpose court
Pantry / cafe
Multipurpose hall
Kids play area with play equipment
Lounge
Walking track
Gym
Senior Citizen Seating Plaza
Gazebo seating
Accent lighting on entry arch and landscape features
FOR MORE DETAILS
93003 93003
www.dacdevelopers.com
TNRERA/1/LO/0925/2026
DATED 10.03.2026
www.rera.tn.gov.in
Member
CREDAI

# வாழ்க மணமக்கள்



## ந. நவீன் – வெ. சுபஸ்ரீ

இவர்களின் திருமண விழா **25.03.2026** புதன்கிழமை விருத்தாசலம் இராணி மஹால் மண்டபம் மற்றும் **27.03.2026** வெள்ளிகிழமை வைதீஸ்வரன் கோயில் சாவித்திரி மஹாலில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சியிலும் கலந்துகொண்டு வாழ்த்திய அனைவருக்கும் எங்களுடைய இருவீட்டார் சார்பில் நன்றியை தெரிவித்துகொள்கிறோம்.

இங்ஙனம்

| | |
|---|---|
| **ச. நடராஜன்பிள்ளை** | **கோ. வெங்கடேசன் பிள்ளை** |
| **ராஜகுமாரி நடராஜன்** | **சிவகாமசுந்தரி வெங்கடேசன்** |
| கன்னியாகுடி, சீர்காழி | கோமாளூர், திருக்கோவிலூர் |



# மணமகன் / மணமகள் தேவை



| | |
|---|---|
| பெயர் | **செல்வன் இரா. விவேக்** |
| படிப்பு | B.E. (Mechanical Engineering) |
| வேலை | Senior Test Engineer, HCL IT Company |
| | Rs. 70,000/PM |
| பிறந்த தேதி | 31.05.1998 |
| உயரம் | 5' - 6" |
| நட்சத்திரம் | ஆயில்யம் 3ம் பாதம் |
| கோத்திரம் | இடைய |
| பூர்வீகம் | அரியலூர் |
| தகப்பனார் | தெய்வத்திரு. **இரா. ராஜன்** |
| தாயார் | **இரா. லதா** (இல்லத்தரசி) |
| முகவரி | 356-1, மேல தெரு, அம்பாபூர் சாலை, |
| | நாகமங்கலம், அரியலூர் - 621 701. |
| | Cell : 98849 38924 / 80126 82125 |



| | |
|---|---|
| பெயர் | **செல்வன் ப. அரவிந்** |
| படிப்பு | B.E. (Mech) |
| வேலை | UCO Bank (Central Govt. Bank) |
| | Rs. 7 Lakhs/PA |
| பிறந்த தேதி | 05.10.1998 |
| நட்சத்திரம் | உத்திரட்டாதி |
| கோத்திரம் | சேவுட |
| பூர்வீகம் | நெடுவாசல் |
| தகப்பனார் | **சோ. பத்மநாபன்** |
| தாயார் | **ப. எழிலரசி** (மயிலாடுதுறை) |
| முகவரி | 39/A, காமராஜர் சாலை, |
| | நெடுங்காடு |
| | Cell : 80721 96761 / 99657 99121 / 75988 90694 |
| விருப்பம் | பணியில் உள்ள வரன் |



| | |
|---|---|
| பெயர் | **செல்வி Malavika Shivakumar** |
| படிப்பு | Completed MBBS, Preparing for Post Graduation |
| பிறந்த தேதி | 03.05.2001 |
| உயரம் | 173 cm |
| நட்சத்திரம் | பூரம் பாதம் 3 |
| கோத்திரம் | வில்வராய |
| பூர்வீகம் | ஈரோடு |
| தகப்பனார் | **Shivakumar B,** Software Engineer |
| தாயார் | **Kamalakumari K,** Banker (திருச்சி) |
| முகவரி | 8/1, 2A Cross, 7th Main, |
| | KSRTC Layout, J.P. Nagar II Phase, |
| | Bangalore - 560 078. |
| | Cell : 94484 69923, 73583 85455 |
| | E-mail : kamalishiva28@gmail.com |
| விருப்பம் | டாக்டர். செவ்வாய் தோஷம் உள்ள ஜாதகம் |
| குறிப்பு | பெண்ணுக்கு செவ்வாய் தோஷம் உண்டு |

# மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | **செல்வன் S. RAVEEN KUMAR** |
| படிப்பு | M. Tech., VLSI., |
| வேலை | Senior Lead Engineer<br>Qualcomm, Bangalore<br>Rs. 45 lakhs per Annum |
| பிறந்த தேதி | 21.11.1993 |
| உயரம் | 175 cm |
| நட்சத்திரம் | Sathayam |
| கோத்திரம் | Kanagarayar |
| பூர்வீகம் | Madurai |
| தகப்பனார் | **A. Sankar**<br>Retd Director of School Education |
| தாயார் | **P. Vasanthi**<br>Retd Head Mistress Govt HSS School |
| முகவரி | Plot No. 28 & 29, VGN Highness,<br>Srinivasapuram, Iyyappanthangal,<br>Chennai-600056.<br>Cell : 7845914635/ 9488094635 |
| விருப்பம் | Employed or Employable Good looking girl belongs to respectable family |



| | |
|---|---|
| பெயர் | **செல்வன் பாலாஜி A.** |
| படிப்பு | B.E. (Mechanical) |
| வேலை | Trainee Licensed Aircraft Engineer,<br>ST Engineering Aerospace Services Company Ltd., Signapore |
| பிறந்த தேதி | 08.10.1999 |
| உயரம் | 182 cm |
| நட்சத்திரம் | உத்திரம் |
| கோத்திரம் | நன்னுட |
| பூர்வீகம் | இளந்தோப்பு, பட்டவர்த்தி |
| தகப்பனார் | **ஆனந்த் R.**<br>Director, Business Development,<br>Brightsun Marine Pte Ltd., Singapore |
| தாயார் | **சசிகலா A.** (80 இராதாநல்லூர்) |
| முகவரி | Jurong East, Singapore<br>India : +91 97892 41997<br>Singapore : +65 81895059<br>+65 82924192 |
| விருப்பம் | பணிக்கு செல்ல விரும்பும் பட்டதாரி மணமகள் |



| | |
|---|---|
| பெயர் | **செல்வன் R. கோகுல்** |
| படிப்பு | B.E. (Mechanical Engineer) |
| வேலை | Medical Claims Analyst,<br>Medmetrix<br>Perungudi,<br>Chennai |
| பிறந்த தேதி | 07.11.1997 |
| உயரம் | 168 cm |
| நட்சத்திரம் | திருவோணம் பாதம் 2 |
| கோத்திரம் | குணவாலுட |
| பூர்வீகம் | பூங்குடி |
| தகப்பனார் | **M. ரவிகுமார்** (T.N.S.T.C. Rtd.) |
| தாயார் | **R. வாசுகி** (Govt. School Teacher) |
| முகவரி | 99429 89207 சிவக்குமார் (சித்தப்பா)<br>99764 86290 (அம்மா) |



| | |
|---|---|
| பெயர் | **செல்வன் S. கணேஷ்குமார்** |
| படிப்பு | B.Tech (IT) |
| வேலை | Capgemini, Chennai<br>Rs. 26,00,000/PA |
| பிறந்த தேதி | 04.04.1997 |
| உயரம் | 187 cm |
| நட்சத்திரம் | அவிட்டம் |
| கோத்திரம் | பூவனுட |
| பூர்வீகம் | சூரியனார்கோவில் |
| தகப்பனார் | **G. சாமிநாதன்**<br>காவல் உதவி ஆய்வாளர் |
| தாயார் | **S. கிருபா** (திருப்புன்கூர்) |
| முகவரி | No. 166 W2, பூங்காவனத் தெரு,<br>திருமுருகன் நகர்,<br>சீனிவாசபுரம்,<br>மயிலாடுதுறை - 609 001.<br>Cell : 94870 14712, 94981 64712 |
| விருப்பம் | படித்த நல்ல குணமுள்ள வரன் |



# மணமகன் / மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வி இரா. ஜோதி |
| படிப்பு | B.A. English, MBA., |
| பிறந்த தேதி | 01.10.1999 |
| உயரம் | 164 cm |
| நட்சத்திரம் | மிருகசீரிடம் 3ம் பாதம் |
| கோத்திரம் | காருட |
| பூர்வீகம் | குறிச்சி (மயிலாடுதுறை) |
| தகப்பனார் | பா. இராமலிங்கம், M.A., B.Ed., ஓய்வு பெற்ற ஆசிரியர் |
| தாயார் | க. அம்பிகா, B.Litt., தமிழாசிரியர் (அரசு பள்ளி) |
| முகவரி | 79, விஸ்வநாதன் நகர், காட்டுமன்னார்கோவில் (PO & TK) கடலூர் மாவட்டம் - 608 301. Cell : 73394 08153, 87782 26003 |
| விருப்பம் | அரசு / IT துறை பணியில் உள்ள வரன் (சென்னை - பெங்களூர்) |
| குறிப்பு | தோஷமற்ற ஜாதகம் தேவை |



| | |
|---|---|
| பெயர் | செல்வி S. SWETHA |
| படிப்பு | M.B.B.S. Internship Dhanalakshmi Medical College, Samayapuram, Trichy |
| பிறந்த தேதி | 04.05.2001 |
| உயரம் | 5' - 4" |
| நட்சத்திரம் | அஸ்தம் |
| கோத்திரம் | சாத்தனுட |
| தகப்பனார் | K. Shanmugam (Business) |
| தாயார் | Umarani (Housewife) |
| முகவரி | Cell : 63691 58545, 79041 83841 |
| விருப்பம் | Dr. / MD / MS |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் J. Rishi Kumar |
| படிப்பு | B.E., M.S. - Production Engineering (Germany) |
| வேலை | Quality Specialist at Corning GmbH, Germany |
| பிறந்த தேதி | 13.01.1996 |
| உயரம் | 172 cm |
| நட்சத்திரம் | சித்திரை |
| கோத்திரம் | மாங்குட |
| பூர்வீகம் | இளந்தோப்பு (மயிலாடுதுறை வட்டம்) |
| தகப்பனார் | T. Jayaraman, Retd. Manager, HCL Technologies |
| தாயார் | M. Aruna, Retd. Postal Employee |
| முகவரி | 20, Appar Street, New Perungalathur, Chennai - 600 063. Cell : 98847 32717, 94457 43948 |
| விருப்பம் | நன்கு படித்த, வேலைக்கு செல்லும் / செல்ல விருப்பமுள்ள, நல்ல குணமுடைய வரன். |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் K.C. முரளிகுமார் |
| படிப்பு | MBBS, MD (Pediatric) |
| பிறந்த தேதி | 16.12.2000 |
| உயரம் | 5' - 10" |
| நட்சத்திரம் | மகம் |
| கோத்திரம் | கனகராயர் |
| தகப்பனார் | S. குமார், M.A., B.Ed., M.Phil., நிறுவனர், சுயநிதி பள்ளிக்குழுமங்கள் |
| தாயார் | R. சித்ரா, M.A., B.Ed., பட்டதாரி ஆசிரியை |
| முகவரி | 8/11,12, பதினாறுகால் மண்டபத் தெரு, சிதம்பரம் - 608 001. Cell : 94427 46728, 90950 04888 |
| விருப்பம் | MBBS, MD (or) Govt. Job |



# CHIDAMBARAM SPIRITUAL STAY

**146/18A, KANAGASABAI NAGAR, CHIDAMBARAM**

சிதம்பரம் நடராஜர் திருவருளால் சிதம்பரம் கனகசபை நகரில் ஆன்மீக சுற்றுலா பயணியர் மற்றும் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளுக்கு குழுவாக வருபவர்களுக்கும் மேலும் குடும்பத்துடன் வருகைபுரியும் அன்பர்களுக்கும் குளிர்சாதன வசதியுடன் (A/c) தங்குவதற்கு விடுதி அமைந்துள்ளது. திருமண விசேஷங்களுக்கு மணமகன், மணமகள், வீட்டார் உறவினர்கள் ஒரே இடத்தில் 50 நபர் வரை தங்குவதற்கு சிறந்த இடம் **"Chidambaram Spiritual Stay"**

**குறிப்பு : இங்கு தங்குபவர்களுக்கு காலை & இரவு சிற்றுண்டி வழங்கப்படுகிறது.**





**மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய அலைபேசி எண்.**

**9790292444, 9790215833, 9884004550**

**முன்பதிவிற்கான கட்டண விபரங்களுக்கு "Booking.com" மற்றும் Google இணைய தளத்தில் காணலாம்**

**Free Driver Accommodation Available, SPL A/c. Cottages Available**

## ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் சேவை மையம்

சித்திரை மாதம் 2025 தொடங்கி உங்களின் ஆதரவுடன் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**சிறப்பம்சங்கள் :**

- தனி நபர் கட்டணம் ரூ. 200/- மட்டும்
- Locker Facility உள்ளது.
- காலை வேளை மட்டும் சிற்றுண்டி வழங்கப்படும்.
- காது குத்துவது / குடும்ப சுப நிகழ்வு கொண்டாடுவோர் / குலதெய்வ வழிபாடு செய்வோர்
- தனி அறைகள் மற்றும் 20 நபர் தங்கும் வசதியுள்ள பொது இடம்.
- குறைந்த கட்டணம், நிறைவான சேவை
- 30 பேர் வரை தங்க சிறந்த இடம்

தொடர்பு 1 : **A. கோவிந்தராஜன்**
சாரதா உணவகம், அமைப்பாளர்
89731 63434

தொடர்பு 2 : **தில்லை ப. செல்வம்**
ஒருங்கிணைப்பாளர்
98403 17346

**இதழின் உள்ளே....**



சங்க நிகழ்வுகள்........................................................11 – 18
சங்கப் பலகை.................................................................................19
சிறுவர் பகுதி.............................................................................21–24
ஓர் சிறு ஆன்மீகப் பயணம்...............................................25
மணமகன் / மணமகள் தேவை............................27–30
குருவை விஞ்சிய சிஷ்யன்..............................................35

**கார்காத்தார் ஒப்புரவு**
**கார்காத்தார் சங்கம் (சென்னை)**
64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882
Whatsapp : 82484 49204

**ஆயுள் சந்தா ரூ. 2000/-**
**ஆண்டு சந்தா ரூ. 300/-**


வெளியீட்டாளர் : **முனைவர் கைலை. சண்முகம்**

ஆசிரியர் : மேலையூர் **S. அன்பழகன்**

அச்சிடுவோர் :
**மீ. நடராஜன்**
**மயூர் பிரிண்டர்ஸ்**
எண். 72/88 காமராஜ் காலனி 8வது தெரு,
(பாளையகாரன் தெரு) கோடம்பாக்கம்,
சென்னை – 600 024. போன் : 4204 6533

கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு “கார்காத்தார் ஒப்புரவு” நிர்வாகம் பொறுப்பேற்காது.

## ஏடு இட்டோர் இயல்



கார்காத்தார் ஒப்புரவின் ஒப்பற்ற வாசகர்களுக்கு எங்களது மனமார்ந்த வணக்கங்களும், வாழ்த்துக்களும்!

2026, ஏப்ரல் 23 அன்று தமிழக சட்டசபைத் தேர்தல் எந்தவித அசம்பாவிதமுமின்றி நன்முறையில் நடைபெற்றது. இம்முறை தமிழகத்தில் 84.69% வாக்குகள் பதிவாகி உள்ளன. ஏப்ரல் 29ஆம் தேதி மேற்கு வங்கத்தில் முடிவடைந்த தேர்தலில் 91.78% வாக்குகள் பதிவாகி உள்ளது.

அதிகபட்சமாக சேலம் வீரபாண்டி தொகுதியில் 93.09%ம், குறைந்தபட்சமாக பாளையங்கோட்டை தொகுதியில் 68.97%ம் வாக்குகள் பதிவாகி உள்ளன. தமிழகத்தில் கரூர் மாவட்டத்தில் 92.65% வாக்குகள் பதிவாகி இருப்பது மக்கள் தங்கள் ஜனநாயக கடமையை நிறைவேற்றுவதில் முனைப்பாக இருப்பதைக் காட்டியுள்ளது. இது ஒரு நல்ல முன்னேற்றம்!

அமெரிக்கா–ஈரான் போரினால், சமையல் எரிவாயு விநியோகம் மக்களுக்கு மிகுந்த மன அழுத்தத்தைக் கொடுத்துள்ளது எனில் அது மிகையன்று. மேற்காசிய போர் பதற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ள சமையல் எரிவாயு விநியோகம் சீராக நான்காண்டு காலம் ஆகலாம் என மத்திய அரசு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பழம்பெரும் பின்னணி பாடகியும், இசைக்குயில் லதாமங்கேஷ்கரின் தங்கையுமான ஆஷா போஸ்லே, ஏப்ரல் 12ஆம் தேதி சுவாச பிரச்சனை, இதய நோய் பாதிப்பு காரணமாக மும்பையிலுள்ள ப்ரீச்கேண்டி மருத்துவமனையில் காலமானார். 12,000க்கும் அதிகமான பாடல்களை இந்தி, மராத்தி, பெங்காலி, குஜராத்தி, தமிழ் உட்பட 20 மொழிகளில் பாடி மகிழ்வித்தவர். இவரது ஆத்மா இறைவனடியில் சாந்தியடைய பிரார்த்திப்போம்!

சி.பி.எஸ்.இ. 10ஆம் வகுப்பில் 93.70 சதவீதம் மாணாக்கர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். தேர்ச்சி விகிதத்தில் தென்மாநிலங்கள் முன்னிலை

வகிக்கின்றன. திருவனந்தபுரம் மற்றும் விஜயவாடா மண்டலங்கள் தலா 99.79 சதவீத தேர்ச்சியுடன் முதலிடத்தைப் பிடித்துள்ளன. அதைத் தொடர்ந்து 99.58 சதவீத தேர்ச்சியுடன் சென்னை மண்டலம் இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது. புதிய கல்விக் கொள்கையின்படி, மே, ஜூன் மாதங்களில் மொழிப்பாடங்கள் தவிர்த்து, மீதி மூன்று பாடங்களுக்கு இரண்டாம் பொதுத் தேர்வுகள் நடத்தப்படஉள்ளன. தற்போது +2 தேர்வு முடிவுகள் வெளிவந்திருக்கும். நம் குல மாணவர்கள் நல்ல மதிப்பெண்கள் பெற்று வெற்றி பெற்றிருப்பார்கள் என நம்புகிறோம். தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் கார்காத்தார் ஒப்புரவின் வாழ்த்துகளும்! ஆசிகளும்! மனதிற்குப் பிடித்த துறையில், மென்மேலும் முன்னேற வாழ்த்துவோம்.

இவ்விதழ் தங்கள் கரங்களில் தவழும்போது தேர்தல் முடிவுகளும் வெளிவந்து, ஆட்சியும் அமையப்பெற்றிருக்கும். அவ்வாட்சி நல்லாட்சியாக அமைய இறைவனைப் பிரார்த்திப்போம். ஆட்சிபீடம் ஏறியவர்களையும் வாழ்த்துவோம்!

கேண்டிடேட்ஸ் தொடரில் வெற்றி பெற்ற முதல் இந்திய வீராங்கனையானார் செஸ் ராணி வைஷாலி. அவருக்கு நமது பாராட்டுக்கள்! இதையடுத்து உலக சாம்பியன்ஷிப் பட்டத்திற்காக, நடப்பு உலக சாம்பியன், சீனாவின் ஜுவென்ஜுனுடன் மோத தகுதி பெற்றுள்ளார். அப்போட்டியிலும் வெற்றி வாகை சூட வாழ்த்துகிறோம்!

## ஓர் அறிவிப்பு

## இளம் எழுத்தாளர்களை உருவாக்கும் திட்டம்

**உங்களுக்குகோர் வேண்டுகோள்.**

உங்கள் அப்பா அல்லது அம்மாவின் கிராமம் குறித்து ஒரு கட்டுரை, கார்காத்தார் ஒப்புரவு இதழில் தமிழ் அல்லது ஆங்கிலத்தில் ஒரு பக்கத்துக்கு மிகாமல் எழுதி அனுப்புங்கள். இது போட்டி அல்ல; ஆனால் உங்கள் கட்டுரைகள் வரும் மாதங்களில் பிரசுரிக்கப்படும். இன்றைய இளைய தலைமுறைக்கு நமது கிராமங்கள் குறித்து தெரிவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது. அனைவரின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் வேண்டுகிறோம். கட்டுரைகள் அனுப்ப வேண்டிய கடைசி தேதி 30.06.2026.

ஆசிரியர் குழு

அனுப்ப வேண்டிய முகவரி

**கார்காத்தார் ஒப்புரவு**
எண். 64, சௌராஷ்டரா நகர்
10 வது தெரு, சூளைமேடு,
சென்னை – 600 094.

## வேலை வாய்ப்பு அறிவிப்பு

சென்னை சூளைமேடு கார்காத்தார் இல்ல வளாகத்தில் செயல்பட்டு வரும் கார்காத்தார் ஒப்புரவு அலுவலகத்தில் பணியிடம் நிரப்பப்பட உள்ளது. கணினியில் பயிற்சி பெற்றவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். ஓய்வு பெற்ற அலுவலர்களும் விருப்பமிருப்பின் விண்ணப்பிக்கலாம். வெளியூரிலிருந்து வரும் மகளிர்க்கு தங்குமிட வசதி செய்து தரப்படும். விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட நமது சங்க முகவரிக்கு தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

**– கைலை. சண்முகம்,**
செயலாளர்,
சென்னை கார்காத்தார் சங்கம்.

முகவரி : **கார்காத்தார் இல்லம்,** 64, சௌராஷ்டிரா நகர்,
10–வது தெரு, சூளைமேடு, சென்னை–600 094.
தொலைபேசி : 044–24724882, அலைபேசி : 8248449204

## சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு

தமிழ்நாட்டில் சுமார் 150 க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் தங்களது சிறப்பான செயல்பாடுகளை சங்க செய்திகளாக அனுப்பி வருவதை வெளியிட்டு வருகிறோம். அதற்கு உதவும் வகையில், சங்கச் செய்திகளை அனுப்புபவர்கள் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் சுருக்கமாக மூன்று பாராக்களுக்கு மிகாமல் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். அதிகமான பாராக்களுடன் வரும் செய்திகள், சுருக்கி கொடுக்கவோ அல்லது நிராகரிக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு என்பதை கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

### நங்கநல்லூர்:

நமது சங்கத்தின் சேவைகளில் ஒரு பகுதியாக அரசு பள்ளி மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. தேர்தல் விதிமுறைகள் காரணமாக அந்த நிகழ்ச்சி தள்ளி வைக்கப்பட்டது. அந்த நிகழ்வை செயலாக்கும் விதமாக, 26.04.2026 அன்று (பள்ளி விடுமுறை என்பதால்) ஒருசில மாணவர்கள் மற்றும் சில ஆசிரியர்களை மட்டும் நமது சங்க அலுவலகத்துக்கு வரவழைத்து பொருட்கள் வழங்கப்பட்டது. சங்க ஆலோசகர் திரு.வெ.சண்முகசுந்தரம் அவர்கள் மாணவர்களுக்கு அறிவுரை வழங்கினார். பள்ளி தலைமை ஆசிரியை சங்கத்திற்கு நன்றி தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து சங்கத்தின் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. தலைவர் திரு.கோ. தியாகராஜன் அவர்கள் தலைமையில் உறுப்பினர் திரு. C. வள்ளிநாயகம் அவர்களின் திருக்குறட்பாவுடன் கூட்டம் துவங்கியது. நமது சங்க உறுப்பினர் திரு. செ. திருமாறன் அவர்களது தந்தையார் திரு. சு. செல்வவிநாயகம் பிள்ளை அவர்களின் மறைவிற்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. செயலர் திரு. வே. கண்ணன் அவர்கள் சென்ற மாத உரையினை வாசித்தார். பொருளாளர் திரு. வை. செல்வகுமார் அவர்கள் தற்போதைய நிதி நிலை குறித்து விளக்கினார். உறுப்பினர் திரு. ச. வீரராஜ்குமாரிடம் கேட்டுக்கொண்டதன் பேரில் ஆனந்தம் அமைப்பை பற்றிய சிறு விளக்கமளித்தார். உறுப்பினர் திரு. S. கல்யாண சுந்தரம் அவர்கள் ஆன்மீக குறிப்புகள் வழங்கினார். கோடைகாலமாதலால், நங்கநல்லூர் ஆஞ்சநேயர் கோவிலுக்கு வரும் பக்தகோடிகள் மற்றும் பொதுமக்களின் தாகம் தீர்க்கும் வகையில் சனிக்கிழமைதோறும் சங்கத்தின் சார்பில் நீர் மோர் வழங்கிட ஒரு மனதாக முடிவு செய்யப்பட்டது. கடந்த 28.03.2026 அன்று குரோம்பேட்டையில் நடைபெற்ற திரு. பரலி நெல்லையப்பர் சிலைக்கு மாலை அணிவிப்பு விழாவில் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டது மகிழ்ச்சி. உறுப்பினர் திரு. M. செல்வராஜ் மற்றும் ஓவியா சரவணகுமார் குடும்பத்தினர் இரவு உணவு வழங்கினர். அவர்களுக்கு சங்கத்தின் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது. உறுப்பினர் திரு. கோ. இளங்கோவன் அவர்களது நன்றியுரையுடன் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

– வே. கண்ணன்,
செயலாளர்

### குரோம்பேட்டை:

செயற்குழு கூட்டம் 15.03.2026 அன்று சிட்லபாக்கம் சௌபர்ணிகா கன்ஸ்ட்ரக்ஷன் அலுவலகத்தில் நடைபெற்றது.

திரு. V.R. செந்தில்குமார் Managing Director, Chennai Radha Engineering Works Groups அவர்கள் செய்த சாதனைகள் மற்றும் சேவைகளை பாராட்டி 24.02.2026 அன்று கிண்டி மெட்ராஸ் ரேஸ் கிளப்பில் நடைபெற்ற லயன்ஸ் இன்டர்நேஷனல் மண்டலமாநாட்டில் அவருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது பெற்றமைக்கு நமது குரோம்பேட்டை சங்கத்தின் சார்பில் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டது.

- J. தீபன், செயலாளர்
96596 32577

### பெருங்களத்தூர்:

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 29.03.2026 அன்று சிவாலி ஹாலில் தலைவர் திரு. R. கார்த்திகேயன் தலைமையில் அனைவரும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாட நடைபெற்றது.

தலைவர் அவர்கள் நமது சங்கத்தின் பொதுக்குழு மற்றும் ஏழாம் ஆண்டு விழா சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு நல்கிய செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்கள். செயலாளர் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மற்றும் ஏழாவது ஆண்டின் விழா அறிக்கையினை படிக்க செயற்குழு ஏற்றுக்கொண்டது. சங்கத்தின் துணைத்தலைவர் திரு. எஸ். சீனிவாசன் அவர்கள் சங்கத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக சந்தா செலுத்தாத 25 உறுப்பினர்களின் பெயர்களை தற்காலிகமாக நீக்குவது சம்பந்தமாக எடுத்துரைத்தார்கள். அடுத்த செயற்குழு கூட்டம் மணிமங்கலத்தில் நடத்தலாம் என்று தீர்மானிக்கப்பட்டது.

சங்கம் கல்லூரி படிப்பிற்காக பரிந்துரைத்த 11 மாணவ செல்வங்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கிய குரு அறக்கட்டளை நிர்வாகிகளுக்கு நன்றியினை தெரிவித்தும் பள்ளிப்படிப்பிற்காக 5 மாணவ செல்வங்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கிய சென்னை கார்காத்தார் சங்க நிர்வாகிகளுக்கும் நன்றியினை தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

உறுப்பினர் பூர்வீகம் இளையமதுகூடம் திரு. A. சண்முகம் (எ) அசோக் அவர்கள் கலந்துகொண்டு சங்கம் சிறப்பாக செயல்பட ஆலோசனைகளாக ஒரு நாள் ஆன்மீக சுற்றுப்பயணம், கூட்டங்களை பகுதிவாரியாக நடத்துதல் என்றும் தானும் தன்னால் முடிந்த பணிகளை செய்வதாகவும் தெரிவித்தார்கள்.

நமது சங்க உறுப்பினர்கள் பூர்வீகம் ஒகலூர் திரு. ரவீந்திரன் அவர்களின் துணைவியார் திருமதி. அருள்செல்வி, பூர்வீகம் அய்யனூர் திரு. ஆனந்த சடேஷ் அவர்களின் தகப்பனார் திரு. பாலதண்டாயுதம் பிள்ளை மற்றும் ஒப்புரவு இதழின் ஆசிரியர் மேலையூர் திரு. அன்பழகன் ஆகியோரின் மறைவுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றி அனைவரும் மௌன அஞ்சலி செலுத்தினார்கள். உதவி பொருளாளர் திரு. B. நாகலிங்கம் அவர்கள் நன்றி நவில, அனைவரும் இணைந்து தேசீய கீதம் பாட கூட்டம் இனிதே நிறைவுற்றது.

– கோ. இராஜகோபாலன், செயலாளர்

## புதுச்சேரி:

5.4.26 அன்று செயலாளர் திரு. S. தமிழ்செல்வன் அவர்கள் இல்லத்தில் மாதக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் திரு. J. ராஜன்பாபு அவர்கள் தலைமை தாங்க துணைத்தலைவர் திரு. S. சிவசண்முகம் அவர்கள் வரவேற்று பேசினார்கள். உறுப்பினர்கள் இந்த ஆண்டு சந்தாவை மனமுவந்து அளிக்க வேண்டுகோள் வைக்கப்பட்டது.

புதுச்சேரி கார்குல உறவு திரு. V. செல்வகுமார் அவர்களின் தாயாரும், மகளிர் அணி கௌரவ ஆலோசகர் திருமதி. S. கண்ணகி அவர்கள் மாமியாருமான அலமேலு அம்மாள் அவர்கள் மறைவுக்கு கூட்டத்தில் ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

– S. தமிழ்செல்வன், செயலாளர்

## பெண்ணாடம் :

மகளிர் தின விழா 2026 பெண்ணாடம் மகளிர் கார்காத்தார் சங்கத்தின் சார்பில், சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு சிறப்பாக நடைபெற்றது. விழாவில் மாநில அமைப்பு செயலாளர் உயர்திரு. S. பழமலைபிள்ளை அவர்கள் தலைமை ஏற்று சிறப்புரை ஆற்றினார். மண்டல தலைவர் உயர்திரு. T. திருநாவுக்கரசு பிள்ளை அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். பெண்களின் உடல்நலத்தின் அவசியத்தை ஆசிரியர் T. மயில்வாகனன்பிள்ளை எடுத்துரைத்தார்கள். மேலும் பெண்களின் பெருமையை அழகாக விளக்கிய திருமதி. மணமல்லி மயில்வாகனன் அவர்களின் பேச்சு அனைவரையும் கவர்ந்தது.

நெகிழி (பிளாஸ்டிக்) பயன்பாட்டின் பாதிப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்திய திருமதி. S. கனிமொழி அவர்கள் சுற்றுசூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். இதனை தொடர்ந்து இந்நாளிலிருந்து நெகிழி பயன்பாட்டை தவிர்ப்போம் என்ற உறுதிமொழி அனைவராலும் ஏற்கப்பட்டது.

மேலும் சமூக பணியில் சிறந்து விளங்கும் கார்குல வள்ளல் உயர்திரு. வெங்கடேசன் பிள்ளை அவர்களுக்கு மகளிரின் சார்பில் நன்றி தெரிவிக்கப்பட்டது. அதேபோல், நமது இன மாணவர்களுக்கு கல்வி ஒளி ஏற்றும் ஆனந்தம் பவுண்டேஷன் உயர்திரு. செல்வகுமார் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்களின் பங்களிப்புடன் நடைபெற்ற விழா, மகளிரின் ஒற்றுமை, தன்னம்பிக்கை மற்றும் சமூக பொறுப்பை வலியுறுத்தும் வகையில் வெற்றிகரமாக நிறைவுபெற்றது.

A. சித்ரா, செயலாளர்

## செந்துறை:

சங்க கூட்டம் 12.04.2026 அன்று திருஞானசம்பந்தர் மடாலயத்தில் சங்கத் தலைவர் திரு. த. வைத்தியநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சங்கச் செயலாளர், திரு. சா. ஜெயராமன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

செந்துறை (லேட்) த. முத்துக்குமரன் பிள்ளை – செண்பகத்தாச்சி தம்பதியரின் மகனும், திருமதி. மாலதி அவர்களின் கணவரும், திரு. பாலமுருகன், திருமதி. ஆர்த்தி இவர்களின் தந்தையுமான ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. மு. ஆறுமுகப்பிள்ளை இயற்கை எய்தியதற்கு, சங்கத்தின் சார்பில் இரங்கல் தெரிவிக்கப்பட்டு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மண்டலத் தலைவர் திரு. இரா. ரவீஸ்வரன் அவர்கள் தனது சிறப்புரையில், கடந்த 04.04.2026–ல் மயிலாடுதுறையில் நடைபெற்ற மாநில செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். இந்த செயற்குழு கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

சங்கத் தலைவர் திரு. த. வைத்தியநாதன் அவர்கள் பேசுகையில், திருஞானசம்பந்தர் மடாலயத்தில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து எடுத்துரைத்தார். இப்பணிகளை முடிப்பதற்கு சுமார் ரூ. 6 லட்சம் தேவைப்படுகிறது. எனவே நமது சங்க உறுப்பினர் அனைவரும் மீண்டும் ஒருமுறை தாராளமாக நன்கொடை அளித்தால் மட்டுமே முடிக்கமுடியும் என தெரிவித்தார்.

மேலும் திருஞானசம்பந்தர் மடாலயத்தில் வ.உ.சி. இளைஞர் அணி உறவுகள் திரு. செ. ஆனந்த் (சிங்கப்பூர்), திரு. கு. கார்த்திக் மற்றும் திரு. அ. செந்தில்குமார் ஆகியோரின் கூட்டு முயற்சியினால் இன்வெர்ட்டர் பேட்டரி பொருத்தப்பட்டுள்ளது. இவர்களின் பெருந்தன்மைக்கும், ஆதரவிற்கும் சங்கத்தின் சார்பில் மனமார்ந்த நன்றி கூறப்பட்டது.

இறுதியாக சங்கத் துணைத்தலைவர் திரு. சு. பன்னீர்செல்வம் அவர்கள் நன்றி நவில, கூட்டம் இனிதே முடிவுற்றது.

– சா. ஜெயராமன், செயலாளர்

## பின்னலூர்:

சங்கத்தின் ஆண்டுப் பேரவை பொது உறுப்பினர்கள் கூட்டம் 12.4.2026 அன்று நடைபெற்றது.

VRM. சண்முகம் பிள்ளை இல்லத்தில் நடைபெற்ற நிகழ்வுக்கு சங்கத் தலைவர் திரு. பி.ஆர். நடராசபிள்ளை தலைமையிலும், அலுவலகச் செயலாளர், திருமதி. மீரா, துணைசெயலாளர் திரு. கனக. தேவனாதன் முன்னிலையிலும் நடைபெற்றது.

மறைந்த திரு. சிவ. குணசேகரன் நினைவாக 5½ அடி உயரமுள்ள (சங்கத்திற்கு) இரும்பு பீரோ வழங்கிய திருமதி. மீரா குணசேகரனுக்கு நன்றி பாராட்டியும், 10வது வகுப்பில் தேர்ச்சி பெற்ற மாணவ, மாணவியர்களான செல்வன் நட. நவீன், செல்வி S.S. மகேஸ்வரிக்கு சங்கத்தின் சார்பாக வெகுமதியாக தலா ரூ. 500/– வீதம் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

சிறப்பு விருந்தினராக உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர், குமராட்சி ஒன்றிய கார்காத்தார் சங்கத் தலைவர், நகைச்சுவைப் பேச்சாளர் உயர்திரு. M.G. தியாகராசன் பிள்ளை அவர்கள் சீரிய, கருத்துக்களை வழங்கி சிறப்பித்தார்கள்.

காலை தேநீரும், பிஸ்கட்டுடன் ஆரம்பித்து மதியம் இனிமையான சாம்பார் சாதமும், தயிர் சாதமும், மோரும் சுமார் 50 பேர்களுக்கு வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

சங்கப் பொருளாளர் திரு. சோம. சந்திரசேகரன் நன்றி கூற நிகழ்ச்சி நிறைவானது.

## சீர்காழி:

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 4.4.26 அன்று தலைவர் திரு. ஜெயச்சந்திரன் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் 100% தங்கள் வாக்கினை பதிவு செய்யும்படி கேட்டுக்கொண்டு, ரவிச்சந்திரன் பொருளாளர் நன்றி கூற கூட்டம் நிறைவுபெற்றது.

– சி. அகோரம் பிள்ளை,
செயலாளர்

## இளந்தோப்பு:

சங்க கூட்டம் 17.04.26 அன்று சிவன் கோயில் வளாகத்தில் நடைபெற்றது.

தலைமை : V. ராஜசேகரன் பிள்ளை,

முன்னிலை : S.S.R. பிள்ளை

திரு. S. சபாநாயகம் பிள்ளை உரையாற்றும் பொழுது ஒப்புரவு படிப்பதன் அவசியத்தை எடுத்துரைத்தார்கள். அனைத்து உறுப்பினர்களும் ஒப்புரவு வாங்க வேண்டி வலியுறுத்தினார்கள்.

மண்டல செயலாளர் திரு. S. சீனிவாசன் பிள்ளை அவர்கள் பெண்ணாடம் கூட்டத்திற்கு சென்று வந்தது பற்றி பேசினார்கள்.

தலைவர் திரு. V. ராமுபிள்ளை அவர்கள் பேசுகையில் வருகின்ற சித்திரா பௌர்ணமி விழாவை (ஸ்ரீ வாழமுடை அய்யனார் கோயில்) காவடி எடுத்தல் மற்றும் பால்குடம் எடுப்பது பற்றி கூறினார்கள். இம்மாத கூட்டம் இனிதே முடிவுற்றது.

நன்றியுரை – S. செல்வநாயகம் பிள்ளை அனைவருக்கும் நன்றி கூறினார்கள்.

– V. குருநாதன், செயலாளர்

## செம்பொன்னார்கோவில்:

06.04.2026 அன்று மாதாந்திர கூட்டம் மற்றும் மகளிர் தினவிழாவும் விவேகானந்தர் வீதி திரு. ஜெயராமன் – நாகவள்ளி அவர்கள் இல்லத்தில் மகளிர் அணி தலைவி அவர்கள் தலைமையேற்கவும், சங்க தலைவர் திரு. M.C.K. ராமநாதன் அவர்கள் முன்னிலையில் இறைவணக்கம், திருமதி. நாகவள்ளி ஜெயராமன் – செல்வி சஞ்சனபாலா பாடிட குத்துவிளக்கு மகளிர் ஐவர் ஏற்றிட, வரவேற்பு மகளிர் அணி செயலர் நல்கிட, சென்ற மாத கூட்டறிக்கை திரு. செயலர் திரு. குரு. முத்துகுமார் வாசிக்க – வரவு செலவு கணக்கை பொருளர் திரு. M.C. செல்வராஜ் அவர்கள் சமர்ப்பிக்க கூட்டம் இனிதே தொடங்கியது.

மகளிர் தின விழாவிற்கு மாநில தலைவர் திரு. K.K.R. சுரேஷ், செயலர் திரு. கைலை சண்முகம், பெரம்பூர் மாவட்ட சென்னை மண்டல செயலர் திரு. V.K. சாமிநாதன், மண்டல செயலர் பெண்ணாடம் திரு. பழமலைபிள்ளை அவர்கள், சிறப்பு பேச்சாளர், தருமை ஆதின தமிழ்துறை HOD முனைவர் திருமதி. T.S. ஆதிரை, தருமை ஆதின தமிழ் புலவர் திரு. செல்வக்குமார், சங்க பொறுப்பாளர்கள், மகளிர் அணி பொறுப்பாளர்கள், இளைஞர் அணி பொறுப்பாளர்கள், சங்க உறுப்பினர், அனைவரும் கலந்து கொண்டனர்.

நமது சங்க தலைவர் அவர்கள் பேசுகையில் இந்த மாதாந்திர கூட்டம் மற்றும் மகளிர் தின விழா ஏற்று நடத்தும் இல்லத்தார்க்கு வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துகொண்டார்கள்.

மகளிர் தின விழாவின் ஒருங்கிணைப்பாளர் திரு. கணபதி நடனம் அவர்கள் பேசுகையில், மாநிலத் தலைவர் அவர்கள் இந்த மண்ணின் மைந்தர் என்றும், மாநில சங்கம் சிறப்பாக செயல்பட செம்பொன் நகர சங்கம் முழு ஒத்துழைப்பு கொடுத்து வருகிறது என்றும் சிறப்புடன் பேசினார்கள்.

மாநில பொதுசெயலர் திரு. கைலை சண்முகம் அவர்கள் பேசுகையில் நமது பண்பாடு, கலாச்சாரம், பழக்கவழக்கம் இவைகளை நாம் அடுத்த தலைமுறைக்கு எடுத்து செல்ல வேண்டும் என்றும் 'கார்காத்தார்' என்றால் தலை நிமிர்ந்து கம்பீரமாக நிற்க வேண்டும் என்றும் இளைய தலைமுறையை சங்க செயல்பாடுகளில் ஈடுபட வைக்கவேண்டும் என்றும் கேட்டுகொண்டார்கள்.

தருமை ஆதினதமிழ்புலவர் திரு.செல்வக்குமார் அவர்கள் பேசுகையில் மகளிர் அனைவரையும் சீருடையில் காண்பதே அற்புதமாக உள்ளது என்றும், பெண்கள் எப்பொழுதும் 'மகிழ்ச்சியாக' இருப்பார்கள் என்பதற்கு ஒரு கதையின் மூலம் எடுத்துரைத்தார். பெண்கள் எப்பொழுது தங்களின் முடிவை தாங்களே எடுக்கிறார்களோ அப்பொழுது மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்றும் கூறினார்கள்.

மகளிர் தின விழாவின் சிறப்பு பேச்சாளர் திருமதி T.S. ஆதிரை அவர்கள் 'பெண்களின் பெருமைதக்க யாவுள' என்ற தலைப்பில் பேசினார்கள். பெண்களின்குடும்ப பொறுப்புகள் எவ்வாறு இருக்கவேண்டும் என்றும், கடமை, உரிமை, சுதந்திரம் என்பதை பற்றி நன்கு அறிந்து செயல்பட வேண்டும் என்றும் பெண்களின் முன்னேற்றத்திற்கு ஆண்களின் பங்கு மிகவும் அவசியம் என்றும் பேசினார்கள்.

நிகழ்ச்சியில் கலந்துகொண்ட அனைத்து பொறுப்பாளர்களுக்கும் மகளிர்க்கும் சங்கத்தின் சார்பாக, நினைவு பரிசு வழங்கி சிறப்பு செய்யப்பட்டது.

கூட்டம் ஏற்று நடத்திய இல்லத்தார் அவர்களுக்கு சங்கத்தின் சார்பாக சிறப்பு செய்யப்பட்டது. இல்லத்தாரால் அளிக்கப்பட்ட இரவு விருந்தில் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

மகளிர் அணி பொருளர் திருமதி துர்காபிரியா அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

– கி. ராமநாதன்,
தலைவர்

## பரசலூர்:

5.04.2026 அன்று சங்க கூட்டம் நக்கீரர் தெரு, சங்கத் தலைவர் திரு. க. கோவிந்தராஜன் பிள்ளை இல்லத்தில் நடைபெற்றது.

திருமதி. E. பானுமதி இறைவணக்கம் பாட திரு. க. கோவிந்தராஜன் பிள்ளை வரவேற்க துணைத்தலைவர் இரா. அமிர்தகணேசன் செயலர் அறிக்கையையும் V. சிவக்குமார் பொருள்

அறிக்கையையும் சமர்ப்பித்தார்கள். நிதிய பதிவேடுகள் உறுப்பினர்களின் பார்வைக்கு விடப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

கூட்டத்தில் பராபவ தமிழ் வருட வாக்கிய பஞ்சாங்கத்துடன் முகப்பு அட்டையில் உறுப்பினர்களின் இல்ல விலாசம் தொடர்பு எண்களுடன் அவசர தேவைக்கு தேவையான தொலைபேசி எண்களும் அழகுடன் நேர்த்தியாக அச்சிடப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டது. நிறைவாக அனைவருக்கும் இனிப்பு, காரம், தேநீர் வழங்கப்பட்டது. சங்கம் சார்பாக இல்லத்தார்கள் கௌரவிக்கப்பட்டார்கள். அதிஷ்ட வருகை பதிவு குலுக்கலில் வெற்றி பெற்றவர்களுக்கு இல்லத்தார் பரிசு வழங்கி கௌரவித்தார்கள்.

திருமதி. சித்ரா நெடுஞ்செழியன் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

– செந்தில்குமார்,
செயலர்

## மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் & தலைச்சங்காடு:

சங்க கூட்டம் 12.04.2026 அன்று தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கத்துடன் இனிதே நடைபெற்றது.

சங்க உறுப்பினர்களை வரவேற்று பேசிய தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள், கார்குல மகளிர் நிதி உதவி திட்டத்தின் வாயிலாக வட்டியில்லா கடன் பெற மகளிர் அனைவரும் விண்ணப்பங்களை விரைந்து அளித்திட கேட்டுக்கொண்டார். சங்க வளர்ச்சி மற்றும் செயல்பாடு குறித்து ஆலோசனை செய்யப்பட்ட பின்னர் நன்றி நவிலப்பட்டு, கூட்டம் இனிதே முடிவுற்றது.

– B. இலட்சுமணன், தலைவர்

## ஆக்கூர்:

சங்கக் கூட்டம், சிவன்கோவிலில் 8.3.2026 அன்று கௌரவத்தலைவர் திரு. Dr. K. பாலகிருஷ்ணன் பிள்ளை அவர்கள் முன்னிலையில் திரு. ஞான. செல்வக்குமார் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திரு. S. சுரேஷ்மணி பிள்ளை இறைவணக்கம் பாடினார்கள்.

நல்லாசிரியர் திரு. A.R.S. பிரபாகர் பிள்ளை அவர்கள் வரவேற்புரையாற்றினார்கள். செயலர் திரு. R. கோவிந்தராசுபிள்ளை அவர்கள் சென்றக் கூட்ட அறிக்கையினை வாசித்தார்கள். திரு. Dr. K. பாலகிருஷ்ணன் பிள்ளை அவர்கள் தமது உரையில், சிவன் கோவில் கும்பாபிஷேகத்தினை தொடர்ந்து ஆக்கூர் மாரியம்மன் கோவில் கும்பாபிஷேக ஏற்பாடுகளை சிறப்பாக நடத்த அறிவுரை கூறினார்கள்.

பொருளாளர் திரு. A.R.S. பிரபாகர்பிள்ளை அவர்கள் நிதிநிலை அறிக்கையினை சமர்ப்பித்தார்கள். வரவிருக்கும் தமிழ் புத்தாண்டிற்குரிய பஞ்சாங்கம் உறுப்பினர்களுக்கு வழங்க ஆலோசனை செய்யப்பட்டது. திரு. G. முத்துக்குமார் பிள்ளை அவர்களின் நன்றியுரைக்குப் பின் ஆக்கூர் திருமதி J. சரோஜா அம்மாள், திரு. R. சுவேதாரண்யம் பிள்ளை, திரு. G. திருஞானசம்பந்தம் பிள்ளை ஆகியோர்களின் மறைவிற்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு, அடுத்தக் கூட்ட அறிவிப்புடன் கூட்டம் நிறைவுற்றது.

– G. செல்வகுமார், தலைவர்
**99424 80320**

## திருவெண்காடு:

சங்கம் தொடங்கிட 10.03.2026 அன்று ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. பெருந்தோட்டம் (ம) திருவெண்காடு கார்குல சான்றோர்கள் இணைந்து திருவெண்காடு கார்காத்தார் சங்கம் என்ற புதிய சங்கம் தொடங்கிடவும், சீர்காழி மண்டல பொறுப்பாளர்கள் (ம) மாநில நிர்வாகிகளை அழைப்பது என தீர்மானிக்கப்பட்டது.

22.03.2026 அன்று பெருந்தோட்டம் திரு. கு. சம்பந்தம்பிள்ளை அவர்கள் இல்லத்தில் செல்வி ம. சரஸ்வதி இறைவணக்கத்துடன், சீர்காழி மண்டல தலைவர் ம. சிங்காரவேலன் அவர்கள் வரவேற்க, மாநில அமைப்பு செயலாளர் திரு. சீனி. பழமலைபிள்ளை அவர்கள் புதிய சங்கம் துவக்கி வைத்தும் கீழ்க்கண்டவர்களை பொறுப்பாளர்களாக பதவி பிரமாணம் செய்து வைத்தார்கள்.

சங்க தலைவர் திரு. கு. சம்பந்தம்பிள்ளை, செயலாளர் திரு. இரா. செந்தில்குமார், பொருளாளர் திரு. ம. இராமு, கௌரவ தலைவர் திரு. வ. பாஸ்கரன், துணைதலைவர் திரு. சீ. சிவனருள்செல்வன்

மேலும் மாதந்திர முதல் கூட்டம் 08.04.2026 புதன்கிழமை மாலை 04.31 மணியளவில் திருவெண்காடு வடக்குவீதி இராமு அ, செல்வம் C. இராஜாமுத்தையா இல்லத்தில் இனிதே தொடங்கியது. சங்க தலைவர் திரு. கு. சம்பந்தம் பிள்ளை அவர்கள் தலைமையில், சீர்காழி மண்டல தலைவர் ம.

சிங்காரவேலன் மாநில சங்கத்துடன் இணைவதும் சந்தா தொகை செலுத்துவது சார்ந்து விரிவாக ஆலோசனை வழங்கினார்கள்.

அதனை தொடர்ந்து சீர்காழி மண்டல செயலர் ந. சிதம்பரநாதன் பிள்ளை, சங்கம் எவ்வாறு செயல்படவேண்டும், சங்க நிகழ்வுகள் எவ்வாறு இருக்கவேண்டும் எனவும் ஆலோசனைகள் வழங்கினார்கள். கௌரவ தலைவர் வ. பாஸ்கரன் பிள்ளை சங்கம் அமைய பாடுபட்டவர்களுக்கு நன்றி தெரிவித்து சிறப்புரை வழங்கினார்.

ஆண்டு சந்தா ரூ. 100/– எனவும், மாதாமாதம் கார்காத்தார் ஒப்புரவு இதழ் பெற்றிடவும், அனைவரின் ஒத்துழைப்புடன் இச்சங்கம் சிறப்பாக செயல்படும் என சங்க தலைவர் கு. சம்பந்தம் பிள்ளை தெரிவித்தார்கள். பிரதி மாதம் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை சங்க நிகழ்வுகள் நடைபெறும் எனவும் தெரிவித்தார்கள்.

நிகழ்ச்சியினை தமிழாசிரியர் கோ. சிவகுமார் தொகுத்து வழங்கினார்கள். இறுதியாக செ. மனோகரன் அனைவருக்கும் நன்றி தெரிவித்து சங்க கூட்டம் இனிதே நிறைவுற்றது.

– K. சம்பந்தம், தலைவர்

## 80 இராதாநல்லூர்:

சங்க கூட்டம் 12.4.2026 அன்று சங்க செயலர் இரா.மு.அ. செல்வம் (எ) இராஜா முத்தையா அவர்கள் இல்லத்தில் தலைவர் தி. முத்துக்குமரசாமி அவர்கள் தலைமையில் சீர்காழி மண்டல செயலாளர் திரு. N. சிதம்பரநாதன் அவர்கள் வரவேற்க கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஏப்ரல் மாதத்தில் பிறந்தநாள் மற்றும் திருமண நாள் காணும் உறுப்பினர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. பொருளாளர் M. சீனிவாசன் அவர்களால் வரவு செலவு கணக்கு முன்னிலைபடுத்தப்பட்டு ஏற்பளிக்கப்பட்டது. இராதாநல்லூர் ஸ்ரீ மாரியம்மன் கோவில் தீமிதி உற்சவ விழா – சித்திரை மாதம் 4ந் தேதி (17.4.2026) வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு மேல் 7.00 மணிக்குள் திருகாப்பு அணிவித்தலும் தொடர்ந்து 10 நாட்கள் திருவிழாவும் நடைபெற உள்ளதால் சங்க உறுப்பினர்கள் அனைவரும் தினந்தோறும் கோவிலுக்கு வருகை தந்து அம்பாளின் அருளைப் பெற கேட்டுக் கொள்ளப்பட்டது. சங்க கௌரவத் தலைவர் திரு. K. இராமசுப்ரமணியன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

– T. முத்துக்குமாரசாமி, தலைவர்

9443645646

## பூம்புகார் - மேலையூர்:

சங்க கூட்டம் (5.4.2026) அன்று உறுப்பினர் திரு. பரணிதரன் இல்லத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. சங்க மகளிர் அணி உறுப்பினர்கள் இணைந்து இறைவணக்கம் பாடி சிறப்பித்தார்கள்.

கூட்டத்தில் கலந்துகொண்ட அனைத்து உறுப்பினர்களையும் மேனாள் தலைவர் திரு. R.S. வரதராஜன் ஆசிரியர் அவர்கள் வரவேற்று பேசினார். நமது சங்கம் சார்பாக வருகின்ற மே மாதம் ஆன்மிக சுற்றுலா செல்வது என தீர்மானிக்கப்பட்டது. இந்த மாத கூட்டத்தில் அனைத்து உறுப்பினர்களுக்கும் "பராபவ" வருஷத்துக்குரிய பஞ்சாங்கம் வழங்கப்பட்டது. உறுப்பினர் அனைவருக்கும் சித்திரை மாத பிறப்பிற்கான வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டது. இறுதியில் தேனீர் விருந்துக்குபின் பொருளாளரின் நன்றியுரையுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

– G. விஜயராகவன்,

செயலாளர்

9994635306

## நெடுங்காடு:

திரு. S. ரெங்கநாதன் அவர்கள் இல்லத்தில் திரு. M. முத்துக்குமரன் அவர்கள் தலைமையில் வரிச்சிக்குடி சங்க கூட்டம் தலைவர், செயலாளர், பொருளாளர், மண்டல செயலாளர் முன்னிலையில் கூட்டம் நடைபெற்றது.

இறைவணக்கம் செல்வி V. தாரணி பாடினார்.

மார்ச் 31ஆம் நாள் நடைபெறும் கைலாசநாதர் தேருக்காக ரூ. 11,000/– அளிக்க முடிவு செய்யப்பட்டது.

கார் நிதிய வட்டியில் இருந்து 36 உறுப்பினர்களுக்கு தலா ரூ. 100/– அளித்தனர். மீதமுள்ள தொகை சங்க நிதியில் அளிக்க முடிவு செய்யப்பட்டது. கார் நிதியத்தில் இல்லாத உறுப்பினர்கள் தேநீருக்காக நன்கொடை அளிக்க கேட்டுக் கொள்ளப்பட்டது.

கடந்த ஆண்டைப்போல இந்த ஆண்டும் பஞ்சாங்கம் வழங்க முடிவு செய்யப்பட்டது.

இந்த மாத கூட்டத்தை நடத்திகொடுத்த இல்லத் தலைவர் M. முத்துக்குமரன் மற்றும் அவர்களின் துணைவியார் அவர்களுக்கு பொன்னாடை போற்றி மரியாதை செய்யப்பட்டது.

இந்த மாத குலுக்கல் நடைபெற்றது. பரிசு விழுந்தவர்களுக்கு சங்க தலைவர் திரு. K.

மோகன்தாஸ் அவர்கள் பரிசு வழங்கி சிறப்பித்தார்கள். பிறகு நன்றி தெரிவிக்கப்பட்டது.

– திரு. S. ரெங்கநாதன்,
செயலாளர்

## மூவலூர்:

29.3.2026 அன்று மாப்படுகை, கீழத்தெரு திரு. முத்துக்குமாரசாமி பிள்ளை அவர்கள் இல்லத்தில் சங்கக் கூட்டம் தலைவர் திரு. S. ராஜ்குமார் தலைமையில் நடந்தது. பொருளாளர் திரு. மா.வெ. தமிழரசன் முன்னிலை வகித்தார்கள்.

சென்ற கூட்டத்தின் அறிக்கையினை சங்க செயலாளர் திரு. G. குருமூர்த்தி வாசித்தார்கள். 2026–27க்கான 'பராபவ' தமிழ் பஞ்சாங்கத்தை மூத்த உறுப்பினர் திரு. முத்துக் குமாரசாமி பிள்ளை வழங்க அதை திரு. கோபாலகிருஷ்ணன் பெற்றுக் கொண்டார்கள். இதனை தொடர்ந்து மற்ற உறுப்பினர்களுக்கும் பஞ்சாங்கம் வழங்கப்பட்டது.

கல்வி நிதி (Crew Trust) வழங்கிய கொடைவள்ளல் திரு. வெங்கடேசம் பிள்ளை அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. மாலை சிற்றுண்டி, இடம் வழங்கிய M. முருகானந்தம் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

இறுதியில் சங்க மாநில தலைவர் திரு. K.K.R. சுரேஷ் அவர்களின் துணைவியார் திருமதி. S. ஆனந்தி அவர்கள் இறைவனடி சேர்ந்தமைக்கு இரங்கல் தீர்மானம் வாசித்து ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

– G. குருமூர்த்தி,
செயலாளர்

## திருவாரூர்:

சங்க கூட்டம் 12.4.26 அன்று திருவாரூர் தெற்கு வீதியில் உள்ள தருமையாதீன ராஜாங்க கட்டளை அரங்கத்தில் சிறப்புடன் நடைபெற்றது. இந்த மாத கூட்டத்தை துணைத்தலைவர் C. ரவிபிள்ளை தலைமையேற்றும், திருமருகல் திரு. பாலசுப்ரமணியன் அவர்கள் முன்னின்றும் நடத்தி வைத்தார்கள்.

முதல் நிகழ்வாக கடவுள் வணக்கமாக பன்னிரு திருமுறை அனைவராலும் பாடப்பட்டது. தலைவர் உரையில் உறுப்பினர்கள் வருகை இன்னும் அதிகமாக வேண்டும். எனவே கூட்டத்திற்கு வரும் உறுப்பினர்கள் அருகில் உள்ள உறுப்பினர்கள் இரண்டு நபர்களையாவது உடன் அழைத்து வரும்படி கேட்டுக்கொண்டார்கள். செயலாளர் சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் சென்ற கூட்ட அறிக்கையையும் மயிலாடுதுறையில் நடந்த செயற்குழு விபரங்களையும் கூறினார்கள்.

திரு. பாலசுப்ரமணியன் திருமருகல் அவர்கள் நமது ஆரூர் ஆழித்தேர் பற்றியும் ஓடாமல் அசையாமல் நின்ற தேரை ஓடவைத்து கொண்டி அம்மன் சரித்திரத்தை மிகவும் சுவைபட கூறினார்கள். கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் தேநீர் சிற்றுண்டி சங்கம் சார்பில் வழங்கப்பட்டது. திரு. தண்டபாணி பிள்ளை திருசெங்காட்டாங்குடி அவர்கள் நன்றி கூறி கூட்டத்தை முடித்து வைத்தார்கள்.

– A. சோமசுந்தரம்,
செயலாளர்

## கும்பகோணம்:

சமூக நலச் சங்க 30வது மங்கல சந்திப்பு 05.04.2026 அன்று நடைபெற்றது.

முதல் நிகழ்வாக காலை 7.45 மணிக்கு நடைபெற்ற அன்னம்பாளிப்பு நிகழ்வில் மாநில தலைவர் திரு. கே.கே.ஆர். சுரேஷ், பொதுச்செயலாளர் திரு. கைலை சண்முகம் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டமைக்கு குழு தலைவர் குணசீலன் மற்றும் குழுவினர் நன்றி தெரிவித்தனர்.

இரண்டாவது நிகழ்வாக சீதாரெட்டி தெருவில் அமைந்துள்ள பொய்யாத விநாயகர் ஆலயத்தில் காலை 8.15 மணியளவில் சுயம்வர பார்வதி கலா ஹோமம் நடைபெற்றது. தமிழ்நாடு கார்காத்த வெள்ளாளர் கூட்டமைப்பு தலைவர் திரு. கே.கே.ஆர். சுரேஷ், பொதுச்செயலாளர் திரு. கைலை சண்முகம் ஆகியோர் கலந்துகொண்டு வரன் விவரம் பட்டியல் வெளியிட்டனர். இந்நிகழ்விற்கு தலைவர் ஏ.எஸ். பழனி தலைமையில் பொருளாளர் ஜி. ராஜாராமன் முன்னிலையில் மங்கல சந்திப்பு குழு தலைவர் எம்.ஆர். கே. பாண்டியன் வரவேற்புரை ஆற்ற, கூட்ட முடிவில் செயலாளர் எஸ். விஜயகுமார் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

காலை சுமார் 9.30 மணியளவில் மங்கல சந்திப்பு வரன் விபர புத்தகம் வழங்கிய பின் கலந்துகொண்ட அனைவருக்கும் காலை உணவு துணை செயலாளர் திரு. சூரியநாராயணன் இல்லத்தில் வழங்கப்பட்டு விழா இனிதே நிறைவு பெற்றது.

– எஸ். விஜயகுமார்,
செயலாளர்

## திருச்சி:

12.04.2026 அன்று நமது சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர் திரு. K. ராஜ்மோகன் – திருமதி. கற்பகம் ராஜ்மோகன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்ற குடும்பச் சந்திப்பு நிகழ்வுக்கு சங்கத்தின் அழைப்பை ஏற்று கார்குல உறவுகள் கலந்துகொண்டு சிறப்பித்தமைக்கு மிக்க நன்றி. திரு. K. ராஜ்மோகன் – திருமதி. கற்பகம் ராஜ்மோகன் மற்றும் மகன்கள் / மருமகள்கள் ஆகியோர் கார்குல சொந்தங்கள் அனைவரையும் வரவேற்று அன்போடு உபசரித்தார்கள். குடும்ப சந்திப்பு ஏற்பாடுகள் திரு. K. ராஜ்மோகன் குடும்பத்தினர் மிகச் சிறப்பாக செய்து இருந்தார்கள். முதல் நிகழ்ச்சியாக சிறுவர்களுக்கான விளையாட்டுகள், மகளிர் விளையாட்டுகள் மற்றும் ஆடவர்களுக்கான விளையாட்டுகளும் நடைபெற்றது. அனைவரும் உற்சாகத்துடன் கலந்துகொண்டு சுமார் 1 மணி நேரம் விளையாடியது அனைவருக்கும் மனநிறைவாக இருந்தது. அடுத்த நிகழ்ச்சியாக திரு. K. ராஜ்மோகன் – திருமதி. கற்பகம் ராஜ்மோகன் அவர்களுக்கு சங்கத்தின் சார்பாக தலைவர் அவர்கள் பயனாடை அணிவித்து கௌரவித்தார்கள். தலைவர் தனது உரையில் K. ராஜ்மோகன் அவர்கள் தனது கடின உழைப்பால் உயர்ந்த இடத்திற்கு வந்துள்ள உயர்ந்த மனிதர் என்று பாராட்டி பேசினார்கள். திரு. K. ராஜ்மோகன் குடும்பத்தினர் சங்க தலைவர் உள்ளிட்ட நிர்வாகிகளுக்கும், திருமண தகவல் மையத்தின் அமைப்பாளர் நவிலு. N.B. பாலசுப்ரமணியன், இணை அமைப்பாளர் C. சபாபதி மற்றும் மேனாள் தலைவர் M. பாலசுப்பிரமணியன் மற்றும் மகளிர் அணி நிர்வாகிகளுக்கு பயனாடை அணிவித்து கௌரவித்தார்கள். இரவு 8.30 மணி அளவில் அறுசுவையுடன் கூடிய விருந்து வழங்கினார்கள்.

அனைத்து ஏற்பாடுகளையும் திரு. K. ராஜ்மோகன் குடும்பத்தினர் சிறப்பாக செய்து இருந்தார்கள். அவர்களுக்கு சங்கத்தின் சார்பில் மனமார்ந்த பாராட்டுக்களுடன் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் குடும்ப சந்திப்பு நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்த அனைத்து கார்குல உறவுகளுக்கும் சங்கத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

## கோவை:

சங்கத்தின் மாதக் கூட்டங்கள் பிப்ரவரி மாதம் 22ந் தேதி அன்று திரு. S. கிருஷ்ணன் – திருமதி. ராதாகிருஷ்ணன் அவர்கள் இல்லத்திலும், மார்ச் 15–ந் தேதி மறைந்த முன்னாள் சங்கத் தலைவர் திரு. K. நமசிவாயம் – நலமுடன் திருமதி. நிர்மலா நமசிவாயம் அவர்கள் இல்லத்திலும் நடைபெற்றது.

சங்க உறுப்பினர் திரு. G. குமாரசாமி அவர்களின் தகப்பனார் திரு. N. கோவிந்தராஜன் பிள்ளை மற்றும் திரு. C. காசி சங்கர நமசிவாயம் அவர்களின் தாயார் திருமதி. C. பொன்னம்மாள் ஆகியோர் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

சங்க உறுப்பினர்கள் திரு. M. மாணிக்கவாசகம் – திருமதி. சுமதி மாணிக்கவாசகம், திரு. செந்தில்குமார் – திருமதி. சுப்புலட்சுமி செந்தில்குமார் மற்றும் திரு. S. வேல்முருகன் – திருமதி. ரமா வேல்முருகன் ஆகியோரது இல்லத் திருமணங்கள் நடைப்பெற்றதைத் தொடர்ந்து வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டது.

மாதக் கூட்டங்கள் நடைபெற இடமளித்து மாலைச் சிற்றுண்டியாக SKC ஏற்பாடு செய்து சிறப்பித்த சங்க உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்து கூட்டங்கள் சிறப்பாக நிறைவுற்றது.

ஏப்ரல் மாத கூட்டம் 19.4.26 அன்று திரு. அரியநாயகம் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. செல்வி ரம்யஸ்ரீ அவர்கள் இறைவணக்கம் பாடினார்கள். திரு. அரியநாயகம் வரவேற்புரை ஆற்றினார்கள்.

CREW கல்வி உதவி பணம் பெற்று பயன்பெறும் மாணவ, மாணவிகளின் பெற்றோர்களை அழைத்து, அவர்களின் பிள்ளைகளின் கல்விக்கு ஆலோசனைகள் எதுவும் தேவையா என அறிந்து உதவ முடிவு எடுக்கப்பட்டது.

அறிவோம் ஆன்மிகம் என்ற தலைப்பில் கடந்த 4 மாதங்களாக ஒவ்வொரு ஞாயிறு அன்று மாலை நடைபெற்ற வருகின்றது. சிறப்பு பேச்சாளராக திருமதி. நெல்லை வடிவு அவர்கள் கலந்துகொண்டு மிக சிறந்த முறையில் உறுப்பினர்களுக்கு திருமுறை பாடல்களையும் அதற்கான விளக்கங்களையும் கூறி வருகிறார்கள். அவர்களுக்கு உறுப்பினர்கள் வாழ்த்துகளையும் நன்றிகளையும் கூறினார்கள்.

2026 மே மாத சங்க கூட்டம் திரு. சிவராஜகோபால் அவர்களின் இல்லத்தில் நடைபெற முடிவு செய்யப்பட்டது.

திரு. வள்ளிநாயகம் நன்றியுரை ஆற்றினார்கள்.

– S. வள்ளிநாயகம்,

செயலாளர்

## சங்கப்பலகை

**பங்கு பெறுவோர் :** வசுமதி, சித்ரா, கௌரி, கோமதி, மீரா, தீபிகா, பிரியா, ஆண்டாள், மீனா.

**இடம்:** செம்மொழிப் பூங்கா

மாலை சுமார் 5 மணி அளவில் தோழிகள் பூங்காவில் கூடுகின்றனர்.

வசுமதி: என்ன பிரியா ? பெரிய flask–வுடன் வந்திருக்கே !

பிரியா: ஒண்ணுமில்லப்பா ! நான்தான் பக்கத்திலே இருக்கிறதாலே காஃபி கொண்டு வந்தேன். இப்ப வேணும்னாலும் குடிக்கலாம்; இல்லன்னா அரட்டைக்கு நடுவே வேணும்னாலும் எடுத்துக்கலாம்.

ஆண்டாள்: இப்பதான் குடிச்சுட்டு வர்றோம். அதனால நடுவிலேயே குடிப்போம்.

மீனா: என்ன ஆண்டாளக்கா ! வைகாசி மாத விசேஷம் சொல்றீங்கீளா ?

ஆண்டாள்: போன வருஷம் பேசுனதே இப்பதான் பேசுனது போல இருக்கு. இன்னைக்கு ஏகாதசி இல்லையா ? தியானக்குழுவிலே லட்சுமிநாராயணர் தவம் கூறப்பட்டது. அதனால அதைப்பத்தி முதலில் சொல்றேன். நான் போன வருஷம் சித்திரை மாதத்தில் வரும் வளர்பிறை ஏகாதசி, மோகினி ஏகாதசி என சொல்லப்படுகிறதுன்னு சொன்னேன். யாருக்காவது ஞாபகம் இருக்கா ?

கௌரி: எனக்கு ஞாபகம் இருக்குக்கா. விரதமிருந்து பெருமாள் கோவிலுக்குச் சென்று இன்றைய தினம் கும்பிட்டால், பாவங்கள் எல்லாம் போகும்ன்னு சொன்னீங்க.

ஆண்டாள்: அதேதான் ! இந்த ஏகாதசிக்கு இன்னொரு பேரை இன்றைக்கு தெரிஞ்சுகிட்டேன். அதுக்கு "காமதா ஏகாதசி" அதாவது விருப்பங்களை நிறைவேற்றும் ஏகாதசி என்று பெயராம். ஒரு கந்தர்வன் இசை வல்லுநர். அவர் செய்த தவறுக்காக, முனிவரால் பாம்பாக சாபம் பெற்றார். அவரது மனைவி கணவரின் சாபம் நீங்க மிக்க பக்தியுடன் காமதா ஏகாதசி விரதமிருந்து, அப்பலனை கணவருக்கு அர்ப்பணிக்க அவரும் திரும்பவும் சாபம் நீங்கி கந்தர்வன் ஆனாராம்.

மீரா: நான் இப்ப செம்மொழிப் பூங்காவைப் பற்றி சொல்றேன். இதை நிர்மாணித்ததில் நம் குலப் பெண்மணி ஒருவர் முக்கியப் பங்காற்றினார். அப்ப பேப்பர்ல அப்போதைய முதல்வர் கலைஞரோட அவரது புகைப்படமும் வந்தது. அவர் பெயர் ரூப்மதி ஆனந்த். பூங்காவை யாராவது புகழ்ந்தால் மனசுக்குப் பெருமையா இருக்கு.

சித்ரா: ஆமாம்க்கா ! இப்ப கோயம்புத்தூர் செம்மொழிப் பூங்காவையும் நிர்மாணித்துள்ளார். அங்கும் அநேகர் அவரைப் பாராட்டுவது கேட்க ரொம்ப பெருமையா இருக்கு.

ஆண்டாள்: அடடா ! இதுவரைக்கும் எனக்கு இது தெரியாதே !

மீனா: எனக்கும்தான் ! இந்த மாதிரியெல்லாம் சொன்னாத்தான் தெரியவருது. 'சூப்பர் எல்நினோ' பத்தி சொல்றேன். 50 ஆண்டுகளுக்குப் பின் வரும் அக்டோபர், நவம்பர் மாதங்களில் 'சூப்பர் எல்நினோ' உருவாகும் என வானிலையாளர்கள் கணித்துள்ளனர். பசிபிக் பெருங்கடலில் கிழக்கு மற்றும் மத்திய பகுதியில் வெப்பம் இயல்பைவிட அதிகமாவது 'எல்நினோ' எனவும், வெப்பநிலை குறைவது 'லாநினா' எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வருடம் ஏற்படப் போகும் எல்நினோவால் தென்மேற்கு பருவ மழை குறைந்துவிடும்வாய்ப்புஉள்ளதாகவானிலையாளர்கள் கூறி உள்ளனர். மழைக் குறைவினால் வறட்சி ஏற்படவும் வாய்ப்புள்ளது எனவும், ஆனால் வடகிழக்கு பருவமழை 2015ஆம் ஆண்டு அளவுக்கு சிறிது அதிகமாக பொழியும் எனவும் கணித்துள்ளனர்.

சித்ரா: இன்னைக்கு செய்தித்தாளில் இது குறித்து செய்தி வந்துள்ளது. சூப்பர் எல்நினோ காரணமாக தமிழகத்தில் கோடை வெயிலின் தாக்கம் செப்டம்பர் மாதம் வரை நீடிக்க வாய்ப்புள்ளதாம். தென்மேற்கு பருவ மழை ஒரு வாரம் முன்பாகவே, மே மாத இறுதியில் தொடங்கி விடுமெனவும், தமிழகத்தில் தென்மேற்கு பருவ மழை வழக்கத்தை விட குறைவாகவே இருக்கும் என்றும் செய்தி கூறுகிறது.

வசுமதி: கல்பாக்கம் அணு உலை பற்றி சொல்றேன். கல்பாக்கம் அதிவேக ஈனுலை (Fast Breeder Reactor) நாட்டின் பெருமைமிகு சாதனை என துணை ஜனாதிபதி திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் அவர்கள் ராஜ்யசபையில் பாராட்டி உள்ளார். கல்பாக்கம் அணுஉலையில் அமைக்கப்பட்ட உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட மாதிரி அதிவேக ஈனுலை ஏப்ரல் 6ஆம் தேதி இரவு செயலைத் தொடங்கியது. ஆயிரக்கணக்கான விஞ்ஞானிகள், பொறியாளர்கள், அணுசக்தி துறையின் பல விரிவுகள் இணைந்து 20 வருடங்கள் பாடுபட்டதன் பலன்தான் இந்த ஈனுலை. இவ்வகை அணுஉலை அதிக எரிபொருள் உருவாக்கும் தனிச் சிறப்பைக் கொண்டதாகும். நமது

பாரதப் பிரதமரும் தனது ‘மன் கி பாத்’ உரையில் இது குறித்து பாராட்டிப் பேசியுள்ளார்.

சித்ரா: நாசா திட்டத்தைப் பற்றி சொல்றேன்ப்பா! நிலவில் தரையிறங்காமல், அதை மிக நெருக்கமாக சுற்றி வந்து ஆய்வு செய்யும் ஆர்டெமிஸ் 2 திட்டத்தை நாசா விஞ்ஞானிகள் செயல்படுத்தியுள்ளனர். இத்திட்டத்தின் கீழ் ஒரியான் விண்கலத்தில் நான்கு வீரர்களுடன் கடந்த 1ஆம் தேதி புளோரிடாவின் கென்னடி விண்வெளித் தலத்திலிருந்து புறப்பட்ட விண்கலம், மனித வரலாற்றில் இதுவரை யாரும் செல்லாத அதிகபட்ச தூரத்தை எட்டியது. 1970ஆம் ஆண்டு அப்பல்லோ 13 திட்டத்தின் கீழ் 4,00,171 கி.மீ தூரம் கடந்தது சாதனையாகயிருந்தது. இப்போது பூமியிலிருந்து 4,06,778 கி.மீ கடந்து சாதனை புரிந்துள்ளது. இத்திட்டத்தை நிர்வகித்தவர்களில் ஒருவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அமித் க்ஷத்ரியா. நாசாவின் பல்வேறு மையங்களின் இயக்குநர்களையும், பல்வேறு விண்வெளித் திட்ட இயக்குநர்களையும் ஒருங்கிணைக்கும் பொறுப்பை வகித்து வருகிறார்.

பிரியா: நானொரு கடிகாரம் பற்றி கூற விழைகிறேன். ஆனால், அதுக்கு முன்னாடி நான் கொண்டு வந்த வறுத்த முந்திரி பருப்பை எடுத்துக்கிட்டு காஃபியைக் குடிச்சு தொடருவோம்.

அனைவரும் காஃபி குடித்து முடித்த பின் அரட்டை தொடர்கிறது.

பிரியா: உலகின் மிக உயர்ந்த கிரகக் கடிகாரம் என பெருமையை உடையது “கிராப் ஹாலுசினேஷன்” கடிகாரம். இது அரிய வகை வைரங்களால் ஆன ஒரு அற்புத கலைப் படைப்பு. இதில் 110 காரட் எடையுள்ள பிங்க், பச்சை, நீலம், மஞ்சள் நிற வைரங்கள் பதிக்கப்பட்டுள்ளன. இதன் மதிப்பு 500 கோடி ரூபாய்க்கு மேலே. பிரிட்டனைச் சேர்ந்த “கிராப் டயமண்ட்ஸ்” என்ற பிரபல நிறுவனம் இதை உருவாக்கி உள்ளது. ஆனால் பார்வைக்கு மட்டுமே; விற்பனைக்கு அல்ல என்று அறிவித்துள்ளது.

தீபிகா: நம் குழந்தைகளில் +2 தேர்வு முடிவு வெளிவந்திருக்கும். அது பற்றி கொஞ்சம் பேசுவோம். என்ஜினியரிங் படிப்பிலும், மருத்துவப் படிப்பிலும் அநேக பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. AI நுண்ணறிவு, கம்ப்யூட்டர் சயின்ஸ்/என்ஜினியரிங், பயோ மெடிக்கல், ரோபாட்டிக்ஸ், ஆட்டோமேஷன், என்விரன்மென்டல், Renewable energy, பயோடெக்னாலஜி, ஜியாலஜியிலும் பல உள்ளார்ந்த பிரிவுகள், ஏரோஸ்பேஸ், B.Sc.யில் Critical care Technology, Clinical Nutrition, Nuclear Medicine, Physican Assistant மற்றும் Visual Communication, Visual Arts, Hotel Management என பல பிரிவுகள் உள்ளன. நம் குழந்தைகளுக்கு எது பிடித்திருக்கிறதோ அதைத் தேர்ந்தெடுத்து, நன்முறையில் படித்து புகழடைய வேண்டும் என நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து வாழ்த்துவோம்.


கௌரி: கேண்டிடேட்ஸ் தொடரில் வெற்றி பெற்ற முதல் இந்திய வீராங்கனையான செஸ் ராணி வைஷாலியைப் பாராட்டுவோம். இதையடுத்து உலக சாம்பியன்ஷிப் பட்டத்திற்காக நடப்புலக சாம்பியன், சீனாவின் ஜுவென்ஜுனுடன் மோத இருக்கிறார். அவர் வெற்றி பெற வாழ்த்துக்கள் கூறிக்கொள்வோம். எகிப்தில் நடந்த ஜூனியர் உலகக் கோப்பைத் துப்பாக்கி சுடுதலில் பெண்களுக்கான 50 m ரைபிள் பிரிவில் மொத்தம் 354.6 புள்ளிகள் பெற்று, இந்திய வீராங்கனை பிராச்சி தங்கம் வென்றுள்ளார். விளையாட்டுத் துறையில் முன்னேறி வருகிறோம். ஆனால் இன்னும் கடக்க வேண்டிய தூரம் மிக அதிகமாக உள்ளது. நமது நாட்டு வீரர், வீராங்கனைகளைப் பாராட்டுவதில் கஞ்சத்தனம் இல்லாமல், அவர்களை ஊக்கப்படுத்த கடமைப்பட்டுள்ளோம்.

மீரா: இந்த வீராங்கனைகளை நிச்சயம் பாராட்டுவோம். நம் குலத்தைச் சேர்ந்த 60 வயதினைக் கடந்த திருமதி. செல்வி மணிவாசகம் புரிந்த சாதனையைக் கூறுகிறேன். நவி மும்பை தமிழ் சங்கத்தின் பொன்விழாவில், லெமூரியா அறக்கட்டளை, பம்பாய் தமிழ்ச்சங்கம், நவி மும்பை தமிழ்ச் சங்கத்தின் நடுவர்கள் முன் 1330 குறட்பாக்களையும் ஒப்புவித்து, பரிசு வாங்கி உள்ளார். ரூ. 10,000 cash award மற்றும் சாதனைப் பெண்மணி (Women Achiever Award) என்ற பட்டத்தையும் வென்றிருக்கிறார். அவருக்கு நமது மனப்பூர்வமான பாராட்டுக்கள்.

தீபிகா: நெஜமாகவே நிச்சயம் பாராட்டணும்க்கா! வேறே யாராவது இப்படி பட்டங்களோ, பரிசுகளோ வாங்கி இருந்தாலும், நாம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். அடுத்த மாதம் எங்கே சந்திக்கலாம் ? வெயில் அதிகமாக இருக்கும். யாராவது வீட்டின் AC அறையில் சந்திக்கலாம். இந்திரா நகரில் உள்ள எங்க வீட்டிலேயே சந்திக்கலாமா ? சொல்லுங்க.

அனைவரும் ஆமோதிக்க, தோழிகள் கலைந்தனர்.

நன்றி! வணக்கம்!



# சிறுவர் பகுதி




தயாரிப்பு **தஞ்சை தியாகு**

அலைபேசி: 94437 00375

Email: thiagu1943@gmail.com


வாழ்க்கை என்பது, வாய்ப்புகள் நிரம்பியது; நாம் எந்த வாய்ப்பை பயன்படுத்துகின்றோம் என்பதைப் பொறுத்தே, நம் வாழ்க்கை அமையும்.

## பிரச்சனைகள் தானே !

நண்பன் செய்த நம்பிக்கைத் துரோகம்,நோய், கடன்சுமைஎன்று ஏகப்பட்ட பிரச்சனைகள் கொண்டமூட்டையோடு ஒருவர் செல்லும் வழியில் ஒரு மகானை சந்தித்தார். தனது பிரச்சனைகளையெல்லாம் கூறினார்.கேட்டுக்கொண்டிருந்த சாமியாரும் உன் பிரச்சனைகளைக் கேட்டால்மிகப் பரிதாபமாகத்தான் இருக்கிறது ஆனால்இவ்வளவு பெரிய மூட்டையை என்னாலும் சுமக்கமுடியாது. வேண்டுமானால் உனக்கு நான் ஒரு உதவி செய்கிறேன்.உன் பிரச்சனை மூட்டையை இதோ,இந்த அறைக்குள் இறக்கி வைத்துவிட்டு அதற்குப் பதிலாக அங்கே இருக்கும் வேறு ஏதாவது ஒரு சின்ன மூட்டையை எடுத்துக் கொண்டுபோ என்றார். அவனும் அப்படியே தன்பிரச்சனை மூட்டையோடு அந்த அறைக்குள்போனான். தன் மூட்டையைவிட சிறிய மூட்டை ஏதாவது இருக்கிறதா என்று தேடிப்பார்த்தான் எல்லாமே இவன்மூட்டையைவிட பெரிதாகவே இருந்தன. கடைசியில் மற்றவர்களின் சுமையைவிட தன்சுமையே பரவாயில்லை என நிம்மதி அடைந்தவனாக தன் பிரச்சனை மூட்டையைத் தூக்கிக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்தான்.

## தன்னம்பிக்கை இழக்காதீர்கள்!



வாழ்க்கையில் அப்ரஹாம் லிங்கன் சந்தித்திடாத தோல்விகள் கிடையாது.27வது வயதில் நரம்பு மண்டலமே பாதிப்புக்குள்ளானது.

46வது வயதில் செனட்டர் தேர்தலில் தோல்வி! 47வது வயதில் துணை ஜனாதிபதி தேர்தலில் தோல்வி ! இத்தனை இழப்புகளாலும் தோல்விகளாலும் அவரது தன்னம்பிக்கையை ஒன்றும் செய்ய முடியவில்லை.52வது வயதில் அவர் அமெரிக்க ஜனாதிபதி ஆனார்.

மூளைக்கு வேலை. 1




8,8,8,8,8,8,8,8 இந்த எட்டு 8களையும் எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்திக்கொள்ளுங்கள். கூட்டல், பெருக்கல், வகுத்தல் எது வேண்டுமானாலும் செய்யுங்கள். ஆனால்விடை 1000 வரவேண்டும். முயற்சியுங்கள் பார்ப்போம் !

மூளைக்கு வேலை. 2

மூன்று எண்கள் உள்ளன. இவற்றுள் முதல் எண். இரண்டாவது எண்ணைப்போல் இரு மடங்கு. இரண்டாவது எண் மூன்றாவதைப்போல் மூன்று மடங்கு. மூன்று எண்களின் சராசரி 100. அந்த மூன்று எண்களும் எவை ?

மூளைக்கு வேலை .3

கூண்டில் ஒரு கிளி உட்கார்ந்து கொண்டிருக்கும்போது கூண்டு எடை பார்க்கப்படுகிறது. கிளி உட்காராமல் கூண்டுக்குள் பறந்து கொண்டிருக்கும்போது கூண்டு எடை பார்க்கப்படுகிறது. இரு எடை களும் ஒன்றாக இருக்குமா ?



**ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு.**

ஏழைகளுக்குக் கொடுத்தலும் அதனால் புகழ் பெருகும்படி வாழ்வதும் சிறந்தனவாகும்.அப்புகழைத் தவிர மக்களுக்கு நன்மை தருவது வேறொன்றும் இல்லை.



### கொக்கென்று நினைத்தாயோ .......

மிகவும்கோபக்கார முனிவர் ஒருவர் காட்டில் தவம் செய்து கொண்டிருந்தபோது கொக்கு ஒன்று அவர் தலையில் எச்சமிட்டு விட்டது.முனிவர் கோபமாக அந்த கொக்கைப் பார்க்க அது அந்த வினாடியே சாம்பலாகிவிட்டது.பிறகு அந்த முனிவர் பசியாறுதல் வேண்டி ஒரு பெண்ணிடம் பிச்சை கேட்டார்.அந்த பெண் தனது கணவருக்குப் பணிவிடைகளைச் செய்துவிட்டு நிதானமாக வந்து முனிவருக்கு உணவு கொடுத்தாள். காக்க வைத்துவிட்டமைக்காக முனிவர் அப் பெண்ணை சாபமிட முற்பட அவள்என்னை கொக்கென்று நினைத்தாயோ கொங்கணவா ? என்று கேட்டாளாம்.முனிவர் ஆடிப் போய்விட்டார்.

தொட்டதற்கெல்லாம் சாபம்கொடுக்கும் நீங்கள் இன்னமும் பூரண ஞானம் பெறவில்லை போல் தோன்றுகிறது. ஒரு முகவரியைக் கொடுத்து இன்னாரைப்பார்த்தால் முழு ஞானம்பெறுவீர்கள் என்று

அனுப்பினாள்.அதுஒரு கசாப்புக்கடைக்காரர் முகவரி. வேதங்களையும், உபநிஷத்துக்களையும் கற்றுத் தேர்ந்த எனக்குப் போயும் போயும் ஒரு கசாப்புக்கடைக்காரர் ஞானபோதம் தருவதாவது என்ற முகச்சுளிப்போடுமுனிவர் பார்க்க நான் கசாப்புக்கடைதான் நடத்துகிறேன். உங்களைப்போல பெற்ற தாயையும் தந்தையையும் வயதான காலத்தில் தவிக்க விட்டு விட்டு கடவுளைத்தேடுகிறேன் என்று காடுகளிலும் மலைகளிலும் வீணே அலையவில்லை. பெற்றோருக்குச் செய்யும் சேவை

யினையே இறைவனுக்குச் செய்யும் தவமாக எண்ணி வாழ்ந்து வருகின்றேன் என்றாராம் அந்த கசாப்புக்கடைக்காரர். முனிவர் ஞானமும் பெற்றார்.

---



**விடுகதைகள்**

1. இந்த மானால் நடக்க முடியாது.அது எந்த மான் ?
2. ஆடாமல் பாடுவான் அசையாமல் பேசுவான். அவன்யார் ?
3. கூனிக்கிழவிக்கு வயிறு நிறைய பற்கள்.அது என்ன ?
4. பூவா பூவா பூக்கும்.தலையில் வைக்க முடியாது.அது என்ன ?
5. பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல்.அது என்ன ?
6. கோடி கோடியா வெள்ளிப்பணம் கொட்டிக் கிடக்குது வீதியிலே.அது என்ன
7. அடிபட்டவன் அழுதால் அதுவே ஆனந்த ராகம் பலருக்கு.அது என்ன ?
8. உறிச்சிட்ட குருவி ஊர்ஊராய் போவுது.அது என்ன ?
9. ஓசையிட்டபடி ஊரைச் சுமப்பான்.அது என்ன ?
10. கூடவே வருவான் ஆனால் பேசமாட்டான்.அவன் யார் ?
11. கொளுத்திய பின் கோடி கும்பிடு.அது என்ன ?

### ஆணுக்குப்பிரசவம்



என்ன வாசகர்களே ! ஆண் எவ்வாறு பிரசவிக்கமுடியும் என்கிறீர்களா ?

குழப்பம் வேண்டாம் .ஆம் 1.620 செ.மீ அளவே உடைய கடல் குதிரை என்றழைக்கப்படும் ஹிப்போகாம்பஸ் மீன் 1 முதல் 5 ஆண்டுகள் வாழ்கின்றது.

இம் மீனினத்தில் பெண் முட்டை இடுவதோடு சரி.இம் முட்டைகளை ஆண் மீன்கள் வாங்கி தனது வயிற்றுக்கு முன்புறம் அமைந்த அடைகாப்புப்பையில் வைத்து கவனமாக அடைகாக்கின்றன. முட்டையினினிறு வெளிவரும் குஞ்சுகள் வளர்ந்து அடைகாப்புப்பையை கிழித்துக்கொண்டு வெளிவருகின்றன.இதனால் ஆணுக்கு பிரசவ வேதனை ஏற்படத்தான் செய்கிறது.தொடர்ந்து குஞ்சுகள் வளரும் வரை பிற எதிரிகளிடமிருந்து பாதுகாக்கும் பொறுப்பினையும் ஆண் மீன் பெற்றுக்கொள்கிறது.சின்னாத்தஸ் எனும் குழாய் மீனினத்திலும் இவ்வாறே ஆண்கள் பிரசவிக்கின்றன என்றால் நம்பு கிறீர்களா ?

### கீதை....எத்தனை கீதை?



கண்ணபிரான் அருளியது பகவத் கீதை.இதைத்தவிர 26 கீதை நூல்கள் உள்ளன. அவையாவன: ரிபு கீதை, பிட்சு கீதை, பராசர கீதை, போத்திய கீதை, ஷடாஜ கீதை, உதந்திய கீதை,ராம கீதை, தேவி கீதை,ஹம்ச கீதை,அரிய கீதை, சம்பக கீதை, வாமதேவ கீதை, சூர்ய கீதை, சிவகீதை, கபில கீதை, விருத்திர கீதை, சூர்ய கீதை, சிவ கீதை, கபில கீதை,விருத்திர கீதை,மங்கி கீதை,ரிஷப கீதை,வஷ்ட கீதை,உத்தவ கீதை, பிரம கீதை, பாண்டவ கீதை, அஷ்டாவக்ர கீதை, உத்தர கீதை, அவதூத கீதை, வியாச கீதை

## சாக்லேட் பிரியர்களுக்கு இனிப்பான செய்தி

மது நாகரீகத்திற்கு முற்பட்டகாலத்திலேயே சாக்லேட் உண்ணப்பட்டு வந்துள்ளதாக நேச்சர் எனும் பிரிட்டிஷ் பத்திரிக்கையில் செய்தி வெளி வந்துள்ளது.கி.மு600 மற்றும் கி.பி250க்கு உட்பட்ட காலத்திலேயே பயன்பட்டுவந்த மண்பாத்திரங்களில் கோகோவின் நுண்ணிய கீரல்கள் காணப்படுகின்றன.மேலும் கொக்கோ தாவரத்தில் காணப்படும் தியோபுரோமா எனும் நுண்துகள்கள் மத்திய அமெரிக்க மனித புதைபடிவங்களின் பற்களிடையே கண்டறியப்பட்டுள்ளதாக ஹர்ச்ட் எனும் அமெரிக்க விஞ்ஞானி குறிப்பிட்டுள்ளார்.சிறப்பு வாய்ந்த குரோமோட்டோகிராஃபி,ஸ்பெக்ட்ரோமெட்ரி இவற்றின் உதவியுடன் ஆய்வுசெய்யும்போது மத்திய அமெரிக்காவில் வாழ்ந்துவந்த மாயன் வம்சத்தினர் திரவ சாக்லேட்டை உண்டு வந்துள்ளமை தெரியவருகிறது.

கொக்கோமரத்திலிருந்துகிடைக்கும்கொக்கோபீன்ஸ்சாக்லேட்தயாரிக்க பயன்படுத்தப்பட்டு வருகிறது. தென் அமெரிக்காவை பிறப்பிடமாகக் கொண்ட இதனை கடவுளின் உணவு என்று பொருள்படும்படியாக வகைபாட்டியலின் தந்தை லின்னயஸ் குறிப்பிட்டுள்ளார்.மாயன் வம்சத்தினர் சோளம், மசாலா பொருட்கள் இவற்றை நன்றாகக்கூழாக்கி தயாரித்த சாக்லேட் பானத்தை பருகி வந்துள்ளனர்,இவ்வுணவு மேல்தட்டு மக்கள் பயன்படுத்துவதாக மட்டுமே இருந்து வந்துள்ளது.முதலாவதாக ஸ்பானிஷ் மக்கள் 16ஆம் நூற்றாண்டில் ஒரு பானமாக சர்க்கரை கலந்து உட்கொண்டனர்.17ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் சாக்லேட் உட்கொள்வது பரவலாகி 18ஆம் நூற்றாண்டில் சாக்லேட் தயாரிப்பு துவங்கியது. 19ஆம் நூற்றாண்டில் முதன்முதலாக திடவகை சாக்லேட் இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்பட்டது.டேனியல் பீட்டர் என்பவர்தான் மில்க் சாக்லேட்டை முதலில் உற்பத்திசெய்யத்துவங்கினார்.கோக்கோ சுமார் நூற்றுக்கு மேற்பட்ட முறைகளில் மருத்துவத்தில் பயன்பட்டு வருவதாக குறிப்புகள் காணப்படுகின்றன. நரம்பு மண்டலம், உணவுப்பாதை, சிறுநீரகம் இவற்றின் செயல்களைத் தூண்டுவித்தல் ஆகிய முக்கியப் பணிகளைச்செய்கிறது.

தொன்மைக்காலத்தில் மதச்சடங்குகளில் பண்டமாற்றாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. சாக்லேட்டின் அடங்கு பொருட்கள் நிறுவனத்திற்கேற்ப மாறுபட்டாலும் அடிப்படையாக ஒலிக்அமிலம் 34 சதவிகிதமும், ஸ்டீரிக் அமிலம் 35 சதவிகிதமும், பால்மிட்டிக் அமிலம் 25 சதவிகிதமும், லினோலிக்அமிலம் 2 சதவிகிதமும் காணப்படுகின்றன.சாக்லேட்டிலுள்ள ஒலிக்அமிலம் இரத்தத்திலுள்ள கொலஸ்டிராலைக் குறைப்பதில் முக்கியப்பங்கேற்கிறது என்பதாக பல்வேறு ஆய்வுஅறிக்கைகள் வெளிவந்துள்ளன.

## பனிக்கட்டி

பிரடரிக் எனும் பேரரசன் ,மக்கள் நலனுக்கென பெரும்தொகை செலவிட்டார். இருப்பினும் மக்கள் வறுமையிலேயே வாடினர்.இதனை அறிந்தவர் தனது அரசவையைக் கூட்டி காரணம் அறிய முற்பட்டார். காரணத்தைக்கேட்டபோது வயதான ஓர் பிரபு எழுந்து நின்று இதற்கான பதிலை நான் கூறுகிறேன் என்று சொல்லிவிட்டு தனக்கு முன்பாக மேஜை மீதிருந்த ஓர் பனிக்கட்டியை எடுத்து பக்கத்தில் உட்கார்ந்திருந்த பிரபுவுடம் கொடுத்து ,இதை வரிசையாக கைமாற்றி மன்னரிடம் கொடுத்து விடுங்கள் என்றார்.

அந்தப்பனிக்கட்டி இப்படி மாறி மாறி கை பட்டுப்பட்ட இறுதியாக அரசனிடம் சேர்ந்தபோது இரண்டு சொட்டு தண்ணீர் மட்டுமே எஞ்சியிருந்தது.

அரசரும் உண்மையை உணர்ந்தார்.இதைப்போல மக்களின் நலனுக்காக அரசு திட்டமிடும் பெருந்தொகை சரியான கண்காணிப்பு, நேர் தொடர்பு இல்லாவிட்டால் வீணாகப் போய்விடும் என்பதை உணர்ந்தார் என்பதாகச் சொல்லப்படும் கதை இது.



## குழந்தைகள் ஜாக்கிரதை!

வீட்டில் அம்மா,அப்பா என்றால் ....பள்ளியில் ஆசிரிய ஆசிரியைகள்தான் குழந்தைகளுக்கு சிறந்த ரோல்மாடல். உடல்,உடை,பாவனை ,பேச்சு, ஆளுமை இவை எல்லாவற்றிலும் தங்களுடைய ஆசிரியர்கள் மரியாதைக் குரியவர்களாக இருப்பதைத்தான் குழந்தைகள் விரும்புவார்கள். அவர்களுக்கு முன்பாக பொய்சொல்வது,செல்போனில் பேசிக்கொண்டே இருப்பது போன்ற விஷயங்கள் குழந்தைகளையும் அப்படியே ஃபாலோ பண்ண வைத்துவிடும் ஜாக்கிரதை!

## அதிக மதிப்பெண்கள் பெற நீங்கள் செய்யவேண்டியவை இவைதானே!

இன்றைய காலகட்டத்தில் பாடத்தில் அதிக மதிப்பெண் வாங்குவதைப் பொறுத்தே உங்கள் அறிவுத்திறன் கணிக்கப்படுகிறது.இதற்கு நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் இவைதான்

1. பள்ளி துவங்கிய முதல் நாளிலிருந்தே படிக்கத் துவங்குங்கள்.
2. பள்ளிச் செல்வதில் ஒருநாள்கூட தவறுதல் கூடாது.
3. வகுப்பில் உங்கள் முழு கவனமும் இருத்தல் வேண்டும்.
4, பாடம் நடத்துதற்கு முன்பாகவும் பாடம் நடத்தியபின்பாகவும் அப்பாடத்தினை படித்துப்பாருங்கள்.
5. தினமும் படிக்கும் பழக்கத்தைக் கைவிடாதீர்கள்.
6. ஆசிரியரோடு நல்ல தொடர்பு வைத்திருங்கள்.பாடம்தொடர்பான சந்தேகங்களை அவ்வப்போது வகுப்பிலேயே கேட்டுத் தெளிவுபெறுங்கள்.
7. எந்தப் பாடத்தினையும் புரிந்துகொள்வதற்கு முன்பாக மனப்பாடம் செய்யாதீர்கள்.
8. ஒரு முறை படித்துவிட்டு இரண்டுமுறை எழுதிப் பாருங்கள்.எழுதிக்கொண்டே படம் வரைந்து கொண்டே படிப்பதால் கவனச்சிதறல் ஏற்படாது.
9. அன்றாடம் படித்த பாடத்தினை குறிப்பெழுதி சொல்லிப்பாருங்கள்.
10. வகுப்பில் ஆசிரியர்எது முக்கியம் என்று சொல்கிறார்களோ அவற்றை நன்கு குறியிட்டுவைத்துக் கொள்ளுங்கள்.
11. நீங்களாகவே ஓர் கால அட்டவணையைத் தயார் செய்துகொள்ளுங்கள்.
12. படித்தப்பாடங்களை அடிக்கடித் திரும்பப் படியுங்கள்.
13. பாடங்கள் புரியவில்லையெனில் அடுத்தவரின் உதவியைக் கேட்க வெட்கப்படாதீர்கள்.
14. நீங்களாக ஓர் வினாவங்கி தயார்செய்து கொள்ளுங்கள்.
15. பாடப்புத்தகத்திலுள்ளள கேள்விகளுக்கு விடைகாணுங்கள்.
16. உங்களுக்கு நீங்களே தேர்வுவைத்துக் கொள்ளுங்கள்.
17. எந்தப் பாடத்தில் உங்கள் மதிப்பெண்கள் குறைவாக உள்ளதோ அந்தப்பாடத்திற்கு அதிக முக்கியத்துவம் தந்து பாடத்தை நன்கு புரிந்துகொள்ளுங்கள்.
18. வகுப்பில் ஆசிரியர் வைக்கும் ஒவ்வொரு தேர்வினையும் பள்ளி இறுதித் தேர்வாகவே கருதுங்கள்.
19. குறைந்தது 5 அல்லது 6 ஆண்டு கேள்வித்தாள்களை சேகரித்து விடைகளை தயார்செய்து கொள்ளுங்கள்.

## ஜோக்ஸ்

1. ரௌடி வீட்ல பொண்ணு கட்டனது தப்பாப்போச்சு. ஏன் ?
   பொண்ணுக்கு சைக்கிள் செயினைப் போட்டு விட்டிருக்காங்க.
2. பாம்புக்கு வரக்கூடிய நோய் எது ? புற்று நோய்.
3. என்ன இது ? ரேஷன் கார்டுல நம்ம தொகுதி எம்.எல்.ஏ பேரை சேத்திருக்கீங்க ?
   ஓட்டுக்கேட்க வந்தப்ப நான் உங்கள் வீட்டுப்புள்ளைன்னு அவர்தாங்க சொன்னாரு !
4. இவ்வளவு தொந்தி இருக்கே ! திருடனை எப்படித் துரத்திப் பிடிக்க முடியும் ?
   எதுக்குத் துரத்தணும் ? அவங்களே கரெக்டா மாமூலைக் கொண்டுவந்து கொடுத்துடுவாங்க !
5. காம்ப்ளிமெண்டரி பாஸ் கொடுக்கறதா சொல்லியும் ஏன் ஜனங்க கச்சேரிக்கு வரத் தயங்கராங்க ?
   கச்சேரி முடியறவரைக்கும் இருக்கணும்னு சபாக்காரங்க கண்டிஷன் போட்டுட்டாங்களாம்.

## விடுகதை விடைகள்

1. அந்தமான் 2. ரேடியோ 3 .கதிர் அரிவாள் 4. காலிஃபிளாவர் 5. கிளி 6. நட்சத்திரம்
7. மேளம் 8. புளி 9. இரயில் 10. நிழல் 11. கற்பூரம்

## மூளைக்கு வேலை.

விடை.1 8 + 8 + 8 + 88 + 88 + 888 =1000

விடை.2 180 , 90 . 30

விடை.3. இருக்காது.கிளியின் எடை மட்டும் எவ்வளவோ அவ்வளவு குறைவாக இருக்கும்.

## ஓர் சிறு ஆன்மீகப் பயணம்

8.4.26 புதன்கிழமையன்று அறுபடைவீடுகளில் ஆறாவது வீடான பழமுதிர்ச்சோலை முருகப் பெருமானை சஷ்டி அன்று அருகில் அமர்ந்து தரிசிக்கும் பாக்கியம் பெற்றோம். பின்னர் மலை மேல் சென்று நூபுரகங்கையில் நீராடி, தீர்த்தம் எடுத்துக்கொண்டோம். நூபுரகங்கை விஷ்ணுவின் பாதங்களிலிருந்து வருவதாக ஓர் நம்பிக்கை. புனித நீர் வற்றாத ஊற்றாக எங்கு உற்பத்தியாகி வருகிறது என்பது புரியாத புதிராகவே உள்ளது. இந்நூபுரகங்கை தொட்டிக்கு காவல் தெய்வமாக ராக்காயி அம்மன் போற்றப்படுகிறார். அழகர் கோவிலின் காவல் தெய்வமான பதினெட்டாம்படி கருப்பண்ணசாமி மந்திரவாதிகளை அடக்கி கோவில் சொத்துக்களைக் காக்க 18 படிகளாக உருமாறியதாக வரலாறு. உருவமில்லா கருப்பண்ணசாமி 18 படிநிலைகளுடன், சந்தனம் பூசப்பட்ட கதவினை வணங்கி வழிபட்டோம். ஆடிமாத பௌர்ணமி அன்று மட்டுமே கதவு திறக்கப்படுகிறது. அடுத்து 108 திவ்யதேசங்களில் ஒன்றான அழகர் கோவில் கள்ளழகரை மனம் குளிர தரிசித்தோம். கள்ளழகர் ஸ்ரீதேவி, பூதேவியோடு அருள்பாலிப்பதுடன், அருகில் சுந்தரவல்லித் தாயாரின் சன்னதியும் உள்ளது. அங்கு வழிபட்டு மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குச் சென்றோம்.

பிரபலமான பழமைமிக்க தலம். கலைநயமிக்க கோபுரங்கள், சிற்பங்கள், ஆயிரங்கால் மண்டபம், பொற்றாமரைக் குளம் என பலவற்றுடன் கூடிய பிரம்மாண்டமான கோவில். தினமும் அன்னை எட்டுவித அலங்காரங்களில் காட்சி தருகிறார். புகழ்பெற்ற திருவிழா கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் சித்திரைத் திருவிழா. மறுநாள் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருமணம் மிகவும் விமரிசையாக நடக்கும். இவ்விழாவிற்கு லட்சக்கணக்கான பக்தர்கள் கூடுகின்றனர். மீனாட்சி அம்மனையும் சொக்கநாதரையும் தரிசித்து, இராமேஸ்வரம் புறப்பட்டோம். கடற்கரை அருகில் உள்ள தமிழ்நாடு டூரிசம்ஹோட்டலில்இரவுதங்கி,மறுநாள்காலைகடலில் நீராடி, கோவிலில் உள்ள 22 புனித தீர்த்தங்களிலும் நீராடி, உடை மாற்றி, ஜோதிர்லிங்கங்களில் ஒன்றான இராமநாத சுவாமியை தரிசனம் செய்ததுடன், கங்கையிலிருந்து கொண்டுவரப்பட்ட புனித நீரையும் அபிஷேகம் செய்து, பர்வதவர்த்தினி அம்பாளையும் வணங்கி உலகிலேயே நீண்ட பிரகாரம் உடைய கோவிலை வலம் வந்து வணங்கி, தனுஷ்கோடி செல்லும் வழியில் கோதண்டராமர் விபீஷ்ணருக்கு பட்டாபிஷேகம் செய்வித்த இடத்தையும் தரிசனம் செய்தோம். தனுஷ்கோடியில் 1964–ல் கோரப் புயலால் சேதமடைந்த இடங்களைப் பார்த்து திருப்புல்லாணி சென்றோம்.

108 திவ்ய தேசங்களில் ஒன்றான ஆதிஜெகந்நாதப்பெருமாள், தாயார், பத்மநாபசுவாமியை வணங்கி, கடலில் தர்ப்பைபுல் மேல் சயனித்த ராமரையும் தரிசனம் செய்து, விஜய ரகுநாதன் சன்னதியையும், பாம்பின் மீது நடனமாடும் கிருஷ்ணரையும் தரிசனம் செய்துவிட்டு 8000 ஆண்டுகள் பழமையான உத்தரகோசமங்கை ஆலயத்தைத் தரிசிக்க சென்றோம். பூவுலகத்தில் முதலில் தோன்றிய சிவாலயம். மங்களநாயகி உடனுறை மங்களநாதர் அருள்புரிகிறார். இது சிவன் பார்வதிக்கு வேத ஆகமங்களின் ரகசியத்தை உபதேசித்த இடமாகவும், மாணிக்கவாசகருக்கு அம்மையப்பராக காட்சி கொடுத்த தலமாகும். ஆறடி உயர மரகத நடராஜர் ஆண்டு முழுதும் சந்தனக்காப்பு அலங்காரத்திலேயே காட்சி தருகிறார். மார்கழி திருவாதிரையன்று சந்தனக்காப்பு களையப்பட்டு அபிஷேகம் செய்யப்படும். களையப்படும் சந்தனம் பக்தர்களுக்குப் பிரசாதமாக அளிக்கப்படும். இங்கு 3000 ஆண்டு பழமையான இலந்தை மரம் தல விருட்சமாக உள்ளது. இங்கிருந்து திருப்பூவணம் சென்றோம். மூலவர் புஷ்பவனேஸ்வரர்; இறைவி சௌந்தரநாயகி. தலவிருட்சம் பலாமரம். நால்வரால் பாடப்பட்ட தலம். இது காசியை விட 14 பங்கும், ராமேஸ்வரத்தை விட 6 பங்கும் சிறப்புடைய தலம். எலும்பை பூவாக மாற்றி சிவனருள் பெற்றதும்; இறைவன் திருமேனியைச் செய்திட தேவையான தங்கத்தை இறைவனே சித்தர் வடிவில் நேரே வந்து ரசவாதம் செய்து தங்கத்தை அருளிச் செய்த தலம். காசிக்கு செல்ல இயலாதவர்கள், அஸ்தியை இங்கோடும் வைகை ஆற்றில் கரைத்துச் செல்கின்றனர். அன்று இரவு பிள்ளையார்பட்டி சென்று தங்கினோம். பிள்ளையார்பட்டி கற்பக விநாயகர் 1600 ஆண்டுகளுக்கு முற்பட்டது. பழமையான குடவரைக் கோயில். வலம்புரி விநாயகராக பத்மாசனத்தில்

வடக்கு நோக்கி காட்சி அளிப்பது சிறப்பானதாகும். வலது கையில் அங்குசமும், இடது கையில் மோதகமும் ஏந்தி காட்சி தருகிறார். அடுத்து நாங்கள் நகரத்தாரின் மாத்தூர் கோயில் சென்றோம். பெரியநாயகி அம்பாள் உடனுறை ஐநூற்றீஸ்வரர் அருள்புரியும் தூய்மையான தலம். அடுத்து சுந்தரர், சம்பந்தரால் பாடப்பெற்ற காளையார்கோயில் சென்றோம். மருது சகோதரர்கள் கட்டிக் காத்த கோயில். இங்கு ஈசன் சொர்ணாகாலீஸ்வரர், சுந்தரேஸ்வரர், சோமேஸ்வரராக அருள்புரிகிறார். அம்பாளும் சொர்ணவள்ளி, சௌந்தரநாயகி, மீனாட்சி அம்மனாக அருளாட்சி செய்கிறார். இக்கோவிலின் பல்லாயிரம் கோடி மதிப்புள்ள நகைகளை ஆங்கிலேயர் எடுத்துச் சென்றாலும், தற்சமயம் மிகவும் பிரபலமாகி உள்ளது. மதியம் திருப்பத்தூர் அ/மி சிவகாமி அம்மை உடனுறை திருத்தளிநாதரை தரிசனம் செய்தோம். இறைவன் வான்மீகருக்கு காட்சியளித்த தலம். இங்கு வாகனம் இல்லா யோகபைரவர் காட்சியளிக்கிறார்.

அடுத்து நாங்கள் சென்ற தலம் ஆயிரம் ஆண்டுகள் பழமையான நகரத்தாரின் ஒன்பது முக்கிய கோவில்களில் ஒன்றான இரணியூர் ஆகும். சிற்பக்கலை நிறைந்த தலம். ஈசன் சுயம்பு லிங்கம். இரணியனை வதம் செய்த நரசிம்மர் இத்தல ஈசனை வணங்கி தோஷம் நீங்கிய தலமாகும். மூலவர் ஆட்கொண்டநாதர்; அம்பாள் சிவபுரந்த தேவி. நரசிம்மருக்கு இத்தல ஈசன் காட்சி அளித்தபடியால், நரசிம்மேஸ்வரர் என்றும் அழைக்கப்படுகிறார். இங்கு முருகப்பெருமான் வள்ளி, தெய்வானையுடன் மயில் மீதமர்ந்து காட்சியளிக்கிறார். அடுத்து 19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த திருத்தலமான நெற்குப்பை சென்றோம். ஈசன் மணமொத்தகண்டீஸ்வரர்; இறைவி மரகதவல்லி. பார்வதி தேவி பசுவாக வந்து பூஜித்து சாப விமோசனம் பெற்ற தலம். பசுவின் பால் ஈசன் மீது நெய் போல பொழிந்தமையால் நெற்குப்பை என பெயர் பெற்றது. ஆண்டுதோறும் ஆவணி மாதத்தில் 19, 20, 21 தேதிகளில் சூரியஒளி நேரடியாக சிவலிங்கத்தின் மீது விழும் அதிசயம் இத்தலத்தின் சிறப்பாகும். இந்த சிறப்புத் தலத்துடன் எங்களின் மூன்று நாள் ஆன்மீகப் பயணம் மனநிறைவுடன் இனிதே நிறைவு பெற்றது.

– மதியழகன் செண்பகவள்ளி

ஈரோடு. 9790555197

## தலைமைப்பண்புகள் (Leadership Traits)

Dr. D. Kalyanakumar, Trichy-18

தலைமைப் பண்பு என்பது அவ்வளவு எளிதான விஷயம்கிடையாது.பலநிலைகளையும்,பலசூழல்களையும் கையாளும் திறன்களை நிச்சயம் பெற்றிருக்க வேண்டும். சரி, ஒரு சாதாரண மனிதனால் இதுபோன்ற தலைமைப் பண்புகளை கற்றுகொள்ள முடியுமா என்றால், நிச்சயம் முடியும். தலைமைப் பண்பு என்பது ஒருவகையில் நம்மிடம் இருக்கும் சில பழக்கவழக்கங்கள் மற்றும் திறமைகள் போன்றதுதான். அந்த பழக்கவழக்கங்களை நீங்கள் நன்றாக வளர்த்துகொண்டால், நிச்சயமாக நீங்களும் ஒரு தலைவனாக மாறலாம். நீங்கள் யாரை எல்லாம் நல்ல நேர்மையான பண்புள்ள தலைவர்கள் என்று உணர்கிறீர்களோ அவர்களுடைய கருத்துக்களையும் சிந்தனைகளையும் செயல்பாடுகளையும் கூர்மையாக ஆராய்ந்து பாருங்கள். அதிலிருந்து எல்லோருக்கும் பொதுவானதாக சிலவற்றை பிரித்துக் கொள்ளுங்கள். அவற்றை சீர்தூக்கி உங்கள் வாழ்வில் பயன்படுத்தி பாருங்கள்.

பல்லக்கில் ஏறி பயணம் செய்யவே பலரும் தயாராக இருக்கிறார்கள். சுமக்கத்தான் ஆளில்லை. ஒரு தலைவன் அடிப்படையில் மிகச் சிறந்த தொண்டனாக இருத்தல் வேண்டும். எந்த வேலையையும் இது எனதில்லை என்று பிரித்துப் பாராதவனாக, மிகச் சிறந்த உழைப்பாளியாக, நல்ல பண்பாளனாக இருத்தல் அவசியம். இவை தானே வந்துவிடாது. பெற்றோர், சுற்றம், குருநாதர்களிடம் இருந்து பெறப்படுவது. அடுத்தவர் கஷ்டத்தை தன் கஷ்டம் போல் பாவிக்கத் தெரியவேண்டும்.

செயலாற்றும் திறன் (executive skill), சமூக அக்கறை (concern for the society), சிறந்த நூலறிவு (sound knowledge), செயல்முறை பற்றிய ஞானம் (knowledge about procedures), முடிவெடுக்கும் திறன் (decision making skill), ஒத்த கருத்தினை உருவாக்கும் பண்பு (ability to create consensus), தகுதியுடையோரை துணை கொள்ளும் பண்பு (selecting eligible trust worthy people as aides), பேதம் காட்டாது செயலாற்றல் (Unbiased / Balanced behaviour), நடுநிலை தவறாமை (Non-deviation from Neutrality), ஒழுக்கந்தவறாமை (Strict adherence to Morality), உயரிய குறிக்கோளினை கொண்டிருத்தல் (Possessing high Objectives) அதை அடைய நேர்வழியில் பயணித்தல் (striving to achieve the goal), மற்றவர்க்கு முன்மாதிரியாய் இருத்தல் (Role model for others) மற்றும் உறுதியான உடனடி செயல்பாடு (Firm and immediate action) ஆகிய நற்பண்புகளைப் பெற்றிருக்க வேண்டும் என்பது வள்ளுவர் வலியுறுத்தும் தலைமைப் பண்புகளாகும்.

# மணமகன் / மணமகள் தேவை

**முக்கிய குறிப்பு :** எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

| பெயர்<br>நட்சத்திரம் | பிறந்த தேதி<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 1/5** செல்வி **M. தனலட்சுமி**<br>உத்திரம் 4ம் பாதம்<br>பழுவுட<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : சமபடிப்பு | **07.05.98**<br>154 cm | B.Tech<br>(CS) | Software Professional<br>EPSILON,<br>Bangalore<br>Rs. 12 Lakhs/PA | திரு. K. மணிகண்டன்,<br>G1, Ashok Manor, Ruby Builders,<br>5/2, Kalamegam Street,<br>East Tambaram, Chennai - 600 059.<br>Cell : **79041 97546, 94471 10452, 97860 56161** |
| **B 2/5** செல்வி **R. சுபஸ்ரீ**<br>அஸ்வினி<br>கொங்கராய<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : நல்ல பணியில் உள்ள வரன் | **09.09.98**<br>160 cm | M.E.<br>(Ph.D) | Asst. Professor (IT)<br>Rajalakshmi<br>Engineering<br>College, Chennai | திரு. P.G. ராமமூர்த்தி,<br>**55/18,** வள்ளலார் தெரு,<br>பெண்ணாடம் **– 606 105.**<br>கடலூர் மாவட்டம்<br>Cell: **99761 77910, 91596 54000** |
| **B 3/5** செல்வி **கவுஸல்யா சங்கரநாராயணன்**<br>மிருகசீரிடம் 4ம் பாதம்<br>வஞ்சிரமுட<br>பூர்வீகம் : சிதம்பரம்<br>விருப்பம் : அமெரிக்காவில் H1Bயுடன் வேலை செய்யும் MS படித்த or Ph.D படிக்கும் வரன் | **30.04.98** | அமெரிக்காவில்<br>M.S., | | திரு. R. சங்கரநாராயணன்,<br>D4202, Mandarina Apt.,<br>7, Lock Street, Kotturpuram,<br>Chennai - 600 085.<br>Cell : **94451 46979** (Wi/fi Indian Number) **968–95827225** |
| **B 4/5** செல்வி **R.M. யாமினி**<br>கேட்டை<br>Athimudiyar Kothram<br>பூர்வீகம் : திருவாரூர்<br>விருப்பம் : நன்கு படித்து வேலையில் உள்ள வரன் | **30.7.2001**<br>156 cm | B.Arch. | Bi3 Solutions<br>Coimbatore | திரு. R. Muthukumar,<br>AF03, Indira Splendor,<br>Mugappair,<br>Chennai - 600 037.<br>Cell : **73959 63969, 99405 32969** |
| **B 5/5** செல்வி **கா. ஸ்ரீபிரியா**<br>பூரட்டாதி<br>வில்வராய<br>பூர்வீகம் : நெய்வாசல் (காட்டுமன்னார்கோவில்)<br>விருப்பம் : நல்ல குணமுள்ள நல்ல பணியில் உள்ள வரன் | **27.03.98**<br>166 cm | B.Sc.<br>(Mathematics) | | திருமதி. M. நிர்மலா கார்த்திகேயன்,<br>**6/70,** மேலத் தெரு,<br>திருக்கடையூர்.<br>Cell: **94429 02828, 80985 20359** |
| **B 6/5** செல்வி **க. ஹரிணி**<br>கேட்டை<br>எறையுட<br>பூர்வீகம் : திருப்பெயர் (அரியலூர் மாவட்டம்) | **27.5.2002**<br>5' - 2" | B.E.<br>(ECE) | GHL Chennai<br>Rs. 3 Lakhs/PA | திரு. சி. கண்ணன்,<br>அமராவதி நகர், தாந்தோன்றிமலை,<br>கரூர் **– 639 005**<br>Cell: **94449 03240, 98940 38363, 80123 40715** |
| **B 7/5** செல்வி **T. Subhashini**<br>Swathi<br>Meenavaraya<br>பூர்வீகம் : திருவாரூர்<br>விருப்பம் : சென்னையில் உள்ள வரன் | **9.4.2001**<br>5' - 5" | B.E.<br>(ECE) | | திரு. S. Thiyagarajan,<br>55, Dr. Koushik Enclave,<br>Nava Shakthi Nagar, Meppur,<br>Chennai - 600 123.<br>Cell : **80560 59794** |
| **B 8/5** செல்வி **V. அனுபிரியா**<br>அனுஷம்<br>வேளா<br>பூர்வீகம் : மயிலாடுதுறை<br>குறிப்பு : சட்டப்படி விவாகரத்து பெறப்பட்டது | **19.07.94**<br>5' - 5" | B.E., | Cognizant,<br>Chennai | திரு. S. வெங்கட்ராமன்,<br>**8/3,** மேட்டுத் தெரு,<br>திருவிழந்தூர்,<br>மயிலாடுதுறை **– 609 001.**<br>Cell: **90924 67384, 73389 84725** |

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **B 9/5** செல்வி **S.S. ஹரிபிரியா**<br>புனர்பூசம்<br>வானதரிய<br>பூர்வீகம் : சூரியனார்கோவில்<br>விருப்பம் : நல்ல குணமுள்ள பணியில் உள்ள வரன் | 15.3.2000<br>155cm | M.Sc.,<br>Clinical<br>Psychology | Psychologist<br>Calmscious<br>Salem | திரு. S. சரவணன்,<br>B1, சந்தன மர வீதி,<br>வட்டம் – 9,<br>நெய்வேலி – 607 801.<br>Cell: 94435 39979, 86374 34170 |
| **B 10/5** செல்வி **G. அமிர்தலஷ்மி**<br>திருவோணம் 3ம் பாதம்<br>வேளா<br>பூர்வீகம் : மடப்புரம், செம்பனார்கோவில் | 20.6.2000<br>157cm | B.E.<br>(Computer<br>Science) | | திரு. J. ஞானசுந்தர்,<br>49, 3வது குறுக்குத் தெரு,<br>சீனிவாச நகர், சிட்லப்பாக்கம்,<br>சென்னை – 600 064.<br>Cell: 94446 54650, 94454 03753 |

## * முக்கிய அறிவிப்பு *

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள், கட்டுரைகள், ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25–ஆம் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் அனுப்பும் போது கட்டாயமாக சங்கத்தின் தலைவர் / செயலாளரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையிட்டு அனுப்ப வேண்டும்.

❖ செய்திகள், கட்டுரைகள், கட்டாயமாக 1½ பக்கம் முதல் 2 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். இதற்கு மேல் வரும் செய்திகள், கட்டுரைகள் மற்றும் கதைகளை குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.

❖ சங்க நிகழ்வுகள், விழாக்கள் பற்றிய செய்திகளை 3 முதல் 4 பாராக்கள் வரை மட்டுமே எழுதி அனுப்பபட வேண்டும். மேலும் செய்திகள் சுருக்கமாகவும், மிகவும் தெளிவாகவும், முக்கிய கருத்துகளை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்களின் கையொப்பத்துடனும் அனுப்பப்பட வேண்டும்.

❖ E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.

❖ **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பட வேண்டும்.**

**Online fund Transfer** Account Number : 130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name : M/S Karkathar Oppuravu
Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

**இந்த QR CODE/UPI யை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்**

**தொகை செலுத்தியபின் Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு" Whatsapp No. 8248449204க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள் update செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.**

❖ செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

**அனைத்து தபால்களையும் கார்காத்தார் ஒப்புரவு,**
**எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.**
**என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.**

**- கார்காத்தார் ஒப்புரவு**

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| G 1/5 செல்வன் **இரா. சீத்தாராமன்**<br>பூரட்டாதி<br>இளமாங்குட<br>பூர்வீகம் : இடைக்கட்டு | 29.09.93<br>170 cm | D.M.E.<br>(Tool & Die) | Dhanam Infra<br>Chennai<br>Rs.70,000/PM | திரு. சோ. இராமகிருஷ்ணன் பிள்ளை,<br>லட்சுமி ஸ்டோர்,<br>இடைக்கட்டு, உட்கோட்டை அஞ்சல்,<br>உடையார் பாளையம் வட்டம்,<br>அரியலூர் மாவட்டம் – **612 905.**<br>Cell : **96298 89261,**<br>**96298 89262** (Whatsapp) |
| G 2/5 செல்வன் **K. முத்துகுமரன்**<br>பூரம் 4ம் பாதம்<br>முனதரிய<br>பூர்வீகம் : சிதம்பரம்<br>விருப்பம் : சமபடிப்பு, பணியில் உள்ள வரன் | 13.08.99<br>172 cm | B.E.,<br>(Mechanical) | Senior Quality<br>Assurance Engineer<br>Banyan Software<br>Chennai<br>Rs. 9 Lakhs / PA | திரு. A. குற்றாலநாதன்,<br>73, தங்கராஜ் நகர்,<br>3வது தெரு, பீர்க்கங்கரணை,<br>பெருங்களத்தூர், சென்னை – 63.<br>Cell : **94445 89175, 94459 46960,**<br>**99432 65363** |
| G 3/5 செல்வன் **S.R. பாலாஜி**<br>ரோகிணி<br>முதனுட<br>பூர்வீகம் : கோட்டவம், காட்டுமன்னார்குடி<br>விருப்பம் : சமபடிப்பு | 30.01.96<br>180 cm | B.Tech.,<br>MBA., | Analyst -<br>Accenture, Chennai<br>Rs. 9 Lakhs/PA | திரு. S. ராமதாஸ்,<br>17, காமராஜ் வீதி,<br>தாகூர் நகர், இலாசுப்பேட்டை,<br>புதுச்சேரி – **605 008.**<br>Cell : 94425 80571, 86108 73478 |
| G 4/5 செல்வன் **K. மணிவேல்**<br>கேட்டை<br>முதனுட<br>பூர்வீகம் : மதுராந்தகநல்லூர் (சிதம்பரம்)<br>விருப்பம் : படித்த பணியில் உள்ள வரன்/<br>பணிக்கு செல்ல விருப்பமுள்ள வரன் | 15.02.93<br>6' - 0" | B.E.,<br>(EEE), | Asst.<br>Commercial Tax<br>Rs 50,000/PM | திரு. T. கேசவன்,<br>5/234-2, நியூ அம்பேத்கர் நகர்,<br>ஜாகீர்ரெட்டிப்பட்டி,<br>சேலம் – **636 302.**<br>Cell : **94422 59692** |
| G 5/5 செல்வன் **S. Sriram**<br>Moolam<br>Poonuda<br>பூர்வீகம் : Kizhaperumbalam | 26.01.98<br>5' - 7" | MCA., | Asst. Manager<br>Karur Vysya Bank<br>Thiruvidaimaruthur<br>Rs. 5.5 Lakhs/PA | திரு. G. Senthamilselvan,<br>2/41B, Andur, Thiruvidaikazhi.<br>Mayiladuthurai (DT).,<br>Cell : **96559 54128** |
| G 6/5 செல்வன் **வ. வெங்கடேசசங்கர்**<br>ஆயில்யம்<br>வீரசிகாமணி<br>பூர்வீகம் : உலகுடை<br>விருப்பம் : பட்டப்படிப்பு முடித்து பணியில் உள்ள வரன் | 25.08.95<br>5' - 6" | B.E.,<br>(Mechanical) | Tata Consultancy<br>Services, Australia,<br>IT Analyst<br>(Test Lead)<br>AUD $ 69,000<br>(Rs. 41 Lakhs) | திரு. ச. வள்ளிநாயகம்,<br>வ.உ.சி. தெரு, வீரசிகாமணி,<br>சங்கரன்கோவில்,<br>தென்காசி<br>Cell : **90472 20415, 90036 00318** |
| G 7/5 செல்வன் **Saravanan V**<br>Sathayam<br>Elathada<br>பூர்வீகம் : Puliyur, Virddachalam | 23.07.97<br>5' - 8" | B.E.<br>(Mechanical)<br>PGDC in<br>Thermal<br>Power, MBA | Madhya Pradesh<br>Hindustan Thermal<br>Power Plant<br>Rs. 70,000/PM | திரு. R. Venkatesan,<br>65E, Type-I, Block - 22,<br>Neyveli - 607 807.<br>Cuddalore District.<br>Cell : **94891 00258, 87787 84261** |
| G 8/5 செல்வன் **V.G. பிருத்திவிராஜன்**<br>கிருத்திகை 4ம் பாதம்<br>தனகுமார<br>பூர்வீகம் : நாகை மாவட்டம்<br>விருப்பம் : நல்ல குணமுள்ள படித்த வரன் | 14.03.97<br>167 cm | B.A.,<br>(English) | Managing Director<br>ஸ்ரீ எட்டுக்குடி<br>முருகன்<br>ஆர்கானிக்ஸ்<br>இண்டஸ்ட்ரீஸ்<br>விருத்தாசலம்<br>மாத வருமானம் 1 லட்சத்திற்கு மேல் | திரு. K.V. குணசேகரன்,<br>848-B, ஜங்ஷன் ரோடு,<br>விருத்தாசலம் – **606 001.**<br>Cell : **98423 87984, 70108 33914,**<br>**95141 50555** |

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| G 9/5 செல்வன் **D. கல்யாணசுந்தரம்**<br>உத்திராடம்<br>காளிங்கராய<br>பூர்வீகம் : அருகேரி | **22.9.96**<br>5' - 8" | B.E.<br>(Civil) | (JDO) Junior Dranghting Officer, Government Staff, Near GH Trichy<br>Rs. 6,00,000/PA | திரு. G. துரைசாமி,<br>West Street, Arigeri - 606 105.<br>Kothattai (PO),<br>Cuddalore Dt.<br>Cell : **97157 04601, 97157 04600** |
| G 10/5 செல்வன் **G. ரஞ்சித்குமார்**<br>சித்திரை<br>வேளா<br>பூர்வீகம் : முடிகண்டநல்லூர், சிதம்பரம் | **30.12.99**<br>170 cm | DAE | Mobi Smart Card Technology +<br>Won Business<br>Rs. 30,000/PM | திரு. R. ஞானசேகர்,<br>**2/253,** பிரதமான சாலை,<br>மேட்டுத்தண்டலம், திருப்போரூர்,<br>செங்கல்பட்டு **– 603 110.**<br>Cell : **98403 56140** |
| G 11/5 செல்வன் **மா. கிஷோர்குமார்**<br>மிருகசீரிஷம் 4ம் பாதம்<br>Komalinga<br>பூர்வீகம் : கிழாய் (மணல்மேடு) | **28.10.99**<br>5' - 10" | B.E.<br>(CSE) | Software Company in Chennai | திரு. T. மாறன்,<br>ஆலபாக்கம், நியு பெருங்களத்தூர்,<br>சென்னை – 63.<br>Cell : **96002 09344** |
| G 12/5 செல்வன் **சி. சிவானந்தம்**<br>உத்திரம்<br>முள்ளூட<br>பூர்வீகம் : வரிச்சிக்குடி, காரைக்கால்<br>விருப்பம் : பணியில் உள்ள வரன். | **21.06.99**<br>178 cm | B.Tech (ECE)<br>M.Tech (NIS) | Network Engineer, (RAN) LMJ Innovations, Amentum Bengaluru | திரு. குமார் (எ) சிவசிதம்பரம்,<br>1, பங்களா தெரு, தேவனூர் சாலை,<br>வரிச்சிக்குடி,<br>காரைக்கால் மாவட்டம்<br>Cell : **97873 10010, 94423 25468** |
| G 13/5 செல்வன் **K. அஜித்குமார்**<br>ரோகிணி<br>எரவுட<br>பூர்வீகம் : அகர ஆலம்பாடி<br>விருப்பம் : நல்ல குணமுள்ள பெண் | **28.10.96**<br>5' - 6" | D.E.E.E. | துபாய்<br>Rs. 9,00,000/PA | திரு. கண்ணன் பிள்ளை,<br>கிழக்கு தெரு,<br>அகர ஆலம்பாடி (PO),<br>புவனகிரி (TK),<br>கடலூர் (DT) **– 608 702.**<br>Cell : **96267 22740,**<br>**89252 17946** (W) |
| G 14/5 செல்வன் **சிவராம் S.**<br>பூசம்<br>ஆலச்சுகுட<br>பூர்வீகம் : துணிசிரமேடு | **17.06.99**<br>168 cm | B.E.,<br>(Civil Engineering) | Ihita Engineering (Civil), Services Chennai<br>Rs. 3,00,000/PA | திரு. S. சண்முகம்,<br>103/61, தெற்கு ரத வீதி,<br>சிதம்பரம் **– 608 001.**<br>Cell : **90030 64028, 96291 29206** |
| G 15/5 செல்வன் **R. குகேஷ்**<br>புனர்பூசம்<br>பல்லவராய<br>பூர்வீகம் : கீழையூர், மயிலாடுதுறை | **19.08.98**<br>183 cm | B.E.<br>(CSE) | Surford Payments, (IT Company)<br>Rs. 30/LPA | திருமதி. R.A. Kannahi,<br>175-1/3, Second Street,<br>Valampuri Nagar,<br>Mayiladuthirai<br>Cell : **96551 72069, 75984 54775** |
| G 16/5 செல்வன் **M. ஜீவானந்தம்**<br>ரேவதி<br>கொத்தனுடை<br>பூர்வீகம் : கொத்தட்டை | **23.12.93**<br>5' - 5" | B.E.<br>(Mech) | Barga India Pvt. Ltd., Chennai | திரு. வி. முத்துமாணிக்கம் (லேட்),<br>I-52, நடுத் தெரு,<br>கொத்தட்டை அஞ்சல்,<br>திட்டக்குடி வட்டம்,<br>கடலூர் மாவட்டம்<br>Cell : **87603 28544, 96889 51044** |
| G 17/5 செல்வன் **S. அருண்குமார்**<br>உத்திராடம்<br>சாத்தனுட<br>பூர்வீகம் : திருவிசநல்லூர்<br>விருப்பம் : இணையான படிப்பு | **27.07.99**<br>5' - 6" | B.E.<br>(CSE) | Own Startup<br>Rs. 30,000 to 50,000 PM | திரு. R. சரவணன்,<br>1E, ஸ்ரீ மகாலிங்கம் நகர்,<br>திருவிடைமருதூர் **– 612 104.**<br>Cell : **98947 51355, 73737 32315** |

# நகர கார்காத்த வேளாளர் சங்கம்
## சீர்காழி

பதிவு எண்.102/2019

## 22-வது மங்கல சந்திப்பு

அன்புடையீர்! வணக்கம்.

சீர்காழி நகர கார்காத்த வேளாளர் சங்கத்தின் 22-வது மங்கல சந்திப்பு நிகழ்ச்சியானது **28.06.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் 1.00 மணி** வரை சீர்காழி, தேர்வடக்கு வீதி **சங்க கட்டிடம் (சி.எம்.டிரஸ்ட்)** தொடங்கி நடைபெற உள்ளது.

கார்குல சொந்தங்கள் அனைவரும் இந்நிகழ்ச்சியினை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் அழைக்கின்றோம். நிகழ்ச்சியில் பங்குபெற விரும்புபவர்கள் பதிவுக்கட்டணம் **ரூ.600/-ஐ** விவரப்பட்டியலுடன், கீழ்க்கண்ட முகவரிக்கு **15.06.2026**க்குள் அனுப்பிட வேணுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நேரில் வந்தும் பதிவு செய்து கொள்ளலாம். வங்கி D.D. அனுப்ப விரும்பும் பதிவுதாரர்கள் Nagara Karkatha Velalar Sangam என்ற பெயரில் சீர்காழியில் மாற்றத்தக்கதாக எடுத்து அனுப்பவும். நிகழ்ச்சி நல்ல முறையில் நடத்திட எப்பொழுதும் போல் ஆக்கப்பூர்வமான ஒத்துழைப்பு நல்கிட அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

என்றும் அன்புடன்

**கி.ஜெயச்சந்திரன் பிள்ளை,** தலைவர் 93607 29307

**சி.அகோரம்பிள்ளை,** செயலாளர் 94861 94225

**சே.ரவிச்சந்திரன்,** பொருளாளர் 97903 19517

**இராம.முரளி பிள்ளை,** நிறுவனர், சி.எம்.டிரஸ்ட் 94420 83841

---

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**திரு.கல்.சுதந்தவனநாதன்**
11, தியாகராஜ நகர்,
சீர்காழி - 609110.
செல்: 94420 83310, 86108 78905

**திரு.S.பிரகாசம்,** M.Com.,
5, R.N.காம்ப்ளக்ஸ், ரயில்வே ரோடு,
கொள்ளிடம் - 609102, சீர்காழி தாலுக்கா
**for GPay** செல் : 7395865318

**தொடர்புக்கான நேரம்: காலை 10.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை**

## விண்ணப்ப படிவம்

| | |
|---|---|
| பெயர் | .................................... |
| ஆண் / பெண் | .................................... |
| பிறந்த தேதி | .................................... |
| உயரம் (செ.மீ) | .................................... |
| நட்சத்திரம் | .................................... |
| கோத்திரம் | .................................... |
| நிறம் | .................................... |
| கல்வித்தகுதி | .................................... |
| பணி விபரம் & ஊதியம் | .................................... |
| தந்தைபெயர் | .................................... |
| பூர்வீகம் | .................................... |
| பணி விபரம் | .................................... |
| தாயார் பெயர் | .................................... |
| பூர்வீகம் | .................................... |
| பணிவிபரம் | .................................... |
| உடன் பிறந்தோர் | ஆண் ☐ பெண் ☐ |
| விருப்பம் மற்றும் இதர தகவல்கள் | .................................... |
| தொடர்பு முகவரி தொலைபேசி உலாபேசி மற்றும் அஞ்சலக குறியீட்டு எண்ணுடன் | .................................... |
| மின் அஞ்சல் முகவரி | .................................... |

## ஊஞ்சல் ஆடுவது எதற்காக தெரியுமா?

தெரியாதவர்கள் தெரிந்து கொள்ளுங்கள்...!

ஊஞ்சல் ஆடுவது எல்லோருக்கும் பிடித்த விஷயம். வீட்டில் இருக்கும் உபகரணங்களிலே பெண்களுக்கு அதிக மகிழ்ச்சியைத் தரக் கூடியது ஊஞ்சல்தான்.

முன்பெல்லாம் ஊருக்கு வெளியே ஆலமரத்தில் ஊஞ்சல் கட்டி பெண்கள் ஆனந்தமாக ஆடினார்கள். பின்பு படிப்படியாய் அது குறைந்து, காணாமல் போய்விட்டது.

இந்த ஊஞ்சல் ஆட்டம் உடல் ஆரோக்கியத்திற்கு மட்டுமல்ல, மன ஆரோக்கியத்திற்கும் ஏற்றது. அதனால் தான் வீடுகளில் தவறாமல் ஊஞ்சல் அமைக்கிறார்கள். இடவசதி குறைவாக உள்ளவர்களும் வாங்கி பயன்படுத்தும் வகையில் ஊஞ்சல்கள் வடிவமைக்கப்பட்டு இப்போது விற்பனைக்கு வருகின்றன.

ஊஞ்சல் ஆடுவது கடவுளுக்கு கூட மகிழ்ச்சி அளிக்கும் விஷயம் என்பதால் தான், கோவில்களில் இறைவனை ஊஞ்சல்களில் வைத்து சீராட்டும் பெருமைமிகு கைங்கர்யங்கள் இன்றும் நடந்து கொண்டிருக்கிறது.

ஊஞ்சலில் ஆடுவதால் மனதில் உள்ள எதிர்மறை எண்ணங்கள் மறைந்து நேர்மறை எண்ணங்கள் தோன்றுகிறது.

மகிழ்ச்சி பெருகி எதிர்காலத்தைப் பற்றிய வளமான எண்ணங்களும் தோன்றுகின்றன.

திருமணங்களில் "ஊஞ்சல் சடங்கு" இதன் அடிப்படையில் தான் நடத்தப்படுகிறது...!

ஊஞ்சல் ஆடுவதால் மனச்சோர்வு நீங்கி உடல் உற்சாகம் பெருகிறது.

நேராக அமர்ந்து கைகளை உயர்த்தி இரு பக்க சங்கிலிகளையும் பிடித்துக்கொண்டு வேகமாக ஆடும்போது, முதுகுத்தண்டு வளைந்து போன பெண்கள் இந்த ஊஞ்சல் பயிற்சியை தினமும் செய்தால் முதுகுத்தண்டுவடம் பலம் பெற்று கழுத்துவலி குணமடைய வழி செய்கிறது. முதுகுத்தண்டுக்கு இரத்த ஓட்டம் படர்ந்து மூளை சுறுசுறுப்பாகிறது. கம்ப்யூட்டரில் மணிக்கணக்கில் உட்கார்ந்து வேலை செய்யும் பெண்கள் இந்த பயிற்சியை செய்யலாம்.

இது பெண்களுக்கு மட்டுமல்ல ஆண்களுக்கும் பொருந்தும்!

தோட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கும்



ஊஞ்சலில் ஆடுவது அதிக பலனை தரக்கூடியது. மரம், செடிகளிலிருந்து வரும் பிராணவாயு வேகமாக உடல் முழுவதும் பரவி ரத்தத்தை சுத்திகரிக்கும்.

இதயத்திற்கு சுத்தமான பிராண வாயுவை கொடுத்து இதயத்தை சீராக இயங்கச் செய்யும். தினமும் தோட்டத்தில் ஊஞ்சல் ஆடுபவர்களுக்கு இதயநோய் மட்டுப்படும்.

ஊஞ்சல் ஆடுவதால் உடலில் ரத்த ஓட்டம் அதிகரித்து இதயத்திற்கு ரத்தம் சீராக செல்லும்.

சாப்பிட்டவுடன் அரைமணி நேரம் மிதமான வேகத்தில் ஊஞ்சல் ஆடுவது நல்லது. சாப்பிட்ட உணவு நன்கு செரிக்க இந்த ஆட்டம் உதவும்.

கோபமாக இருக்கும் போது ஊஞ்சல் ஆடினால் கோபம் தணியும்.

வெளியில் சுற்றியலைந்து விட்டு வந்து ஊஞ்சலில் உட்கார்ந்து கண்களை மூடி தலையை சற்றே மேலே உயர்த்தி, இரு கைகளையும் ஊஞ்சல் பலகையில் பதியவைத்து ரிலாக்ஸாக ஆடினால் களைப்பெல்லாம் பறந்து, உடலின் ஒவ்வொரு பகுதியும் ஓய்வு பெற்று நிம்மதி ஏற்படும்.

பழங்காலத்தில் எல்லா வீடுகளிலும் வரவேற்பறையில் ஊஞ்சல் கட்டி வைத்திருப்பார்கள்.

வீட்டுக்குள் வரும் தேவதைகள் ஊஞ்சலில் ஆடப் பிரியப்படுவார்கள், ஊஞ்சலில் ஆடி நல்லது செய்வார்கள் என்பதும் நம்பிக்கை.

சுப காரியங்களைப் பற்றி பேசும் போது ஊஞ்சலில் உட்கார்ந்து பேசுவதும் வழக்கமாக இருந்தது.

இல்லத்திற்கு அழகு சேர்க்கும் கலைப்பொருட்களில் ஊஞ்சலும் ஒன்று.

இதை ஒரு தெய்வீக ஆசனம் என்றும் கூறுவர். வாஸ்துபடி வீட்டின் முகப்பில் ஊஞ்சல் அமைத்தால் நல்லது...!

– அர்ச்சனா சுவேதாரண்யம்,
சென்னை – 90. செல்: 9943702054

## எங்களின் இனிய கர்நாடகா பயணம்

7.4.26 செவ்வாய்க்கிழமை அன்று காலை சுமார் 7 மணிக்கு புறப்பட்டு மாலை சுமார் 6.30 மணிக்கு குக்கே சுப்ரமண்யா கோவில் அடைந்தோம். ஐயாயிரம் ஆண்டுகள் பழமையான மிகப் புகழ் பெற்ற முருகன் கோவில். இது நாக தோஷ பரிகாரத் தலம். நாக இனத்தை கருட பகவான் அழிக்க நினைத்ததால், வாசுகி நாகம், முருகனை நோக்கி இங்கு உள்ள மலை குகை ஒன்றில் கடும் தவம் புரிய, முருகனும் காட்சி கொடுத்து நாக இனத்தைக் காப்பாற்றுவதாக வாக்களித்தார். இங்கு சுப்ரமண்யர் ஐந்து தலை நாகம், ஏழு தலை நாகங்களுக்கு அடியிலேயே சுயம்பு மூர்த்தியாக எழுந்தருளி உள்ளார். சூரபத்மனை வதம் செய்த பின், இங்கு வந்து முருகன் தவமிருந்து, பின் கைலாயம் சென்றார் என்று சத்குரு கூறியுள்ளார். இங்குள்ள மலைகள் ஆறு முனைகளுடன், அறுகோண வடிவில் அமைந்திருப்பது அதிசயமாக உள்ளது. கூட்டம் அதிகமாக இருந்ததால், சிறப்பு வழியில் சென்று பீடத்தின் மேல் திருவாட்சியுடன், அமர்ந்த கோலத்தில் ஆறு முகங்களுடனும், 12 கரங்களுடனும், அழகு குமரன் பின்புறம் 5 தலை நாகம், காலடியில் மற்றும் இரு ஐந்து தலை நாகங்கள், நடுவில் லிங்க வடிவில் சிறிய முருகன் சிலை, விபூதி அபிஷேகத்தில் நின்ற கோலத்தில் முருகன் என் கண்களுக்கு காடசி தந்தார்.

ஆதி சுப்ரமண்ய கோயில் பின்புறம் உள்ளது. மாலை 7 மணிக்கெல்லாம் நடை மூடப்படுகிறது. சுப்ரமண்யர் சன்னிதிக்கு அருகில் நரசிம்மர் சன்னதி உள்ளது. அங்கு பிரசாதமாக தீர்த்தம், குங்குமம், துளசி கொடுக்கிறார்கள். 7.30 மணிக்கு அலங்கரிக்கப்பட்ட கோயில் யானை கொடிமரத்துக்கருகே வந்ததும், மூன்று முறை பிளிறி, மண்டியிட்டு தும்பிக்கையால் மூன்று முறை வணங்குகிறது. அதுபோலவே நரசிம்மர் சன்னிதியிலும் வணங்கியதும், உள்ளிருந்து வாத்திய வரிசை, தீப்பந்தங்கள், நான்கு பேர் சிறிய தங்க உற்சவ மூர்த்தியை தோளில் தூக்கிக்கொண்டு, யானை முன்னே செல்ல ஊர்வலமாக புறப்பட்ட இடத்திற்கு வருகிறார்கள். இரண்டாவது பல்லக்கில்; மூன்றாவது ரதத்தில் ஊர்வலமாக வந்து, தீபாராதனை காட்டி நடை சாத்துகிறார்கள். தேன் தினை மாவு பிரசாதத்தினையும், தீர்த்தத்தையும் பெற்றுக்கொண்டு இரவு சுமார் 9 மணி அளவில் வெளியே வந்து அறை எடுத்து தங்கினோம்.

புதன் காலை 5 மணிக்கு உடுப்பி கிருஷ்ணன் கோவிலுக்குப் புறப்பட்டோம். நிறைய வளைவுகளுடன் கூடிய மலைப்பாதையில், காடுகள் இருபுறமும் நம் கூடவே பயணிக்க, சுமார் 8 மணிக்கு கோவிலை அடைந்தோம். 8.30க்குத்தான் கிருஷ்ணர் தரிசனம் என்பதால், சுற்றுப்பிரகாரத்தில் உள்ள ஆஞ்சநேயர், கிருஷ்ணர், நவக்கிரகம், பஞ்சமுக ஆஞ்சநேயர் சந்நிதிகளையும், அங்கிருந்த பிருந்தாவனத்தையும், கீதை கோவிலையும் தரிசித்து உடுப்பி கிருஷ்ணரை சாளரத்தின் வழியே தரிசித்தோம். துவாபர யுகத்தில் ருக்மணி, கிருஷ்ணரிடம், உங்களை எப்போதும் பூஜிக்க வரம் கேட்க, பகவானும் தேவ சிற்பியான விஸ்வகர்மாவை அழைத்து, சிறிய அளவிலான தன் உருவச் சிலையை வடிவமைக்குமாறு கூறுகிறார். அவரும் ஒரு கருப்புநிற கிருஷ்ணனை வடிவமைத்துக் கொடுக்க, ருக்மணி தேவி தினமும் மிகுந்த பக்தியுடன் பூஜித்து வருகிறார். யுகம் முடியும் தருணத்தில் துவாரகையை கடல் விழுங்க, விக்கிரகமும் கடலுக்கடியில் அமிழ்ந்து விடுகிறது. கலியுகத்தில் மத்வாச்சாரியாரின் கனவில் தோன்றி கடலில் உள்ள தனது உருவத்தை வெளியிலெடுத்து பிரதிஷ்டை செய்யுமாறு கூறுகிறார். இதுவே உடுப்பியில் உள்ள கிருஷ்ணராகும். கோவிலுக்குள் வர இயலாத ஒரு பக்தரின் பொருட்டு, கிருஷ்ணன் திரும்பி நின்று தரிசனம் கொடுத்ததாக ஐதீகம். அதனால்தான் மத்து கையில் வைத்திருக்கும் உடுப்பி கிருஷ்ணனை சாளரத்தின் வழியே நாம் தரிசிக்கிறோம்.

உடுப்பியில் இருந்து புறப்பட்டு 12 மணி அளவில் கொல்லூர் மூகாம்பிகை கோவில் அடைந்தோம். உடுப்பியிலும், கொல்லூரிலும் ஸ்ரீ அச்சுதானந்த சாயி அவர்களின் சீடர்கள் எங்களுக்கு பிரத்யேக தரிசனத்திற்கு மிகுந்த உதவியாக இருந்தனர். உச்சிகால பூஜைக்குப் பின் கோவில் மூடும் சமயத்தில் ஒரு பூர்வாங்க தரிசனம் செய்து கொள்ளுங்கள் என்று கூறவும், சிறப்பு வழியில் சென்று தேவியை மனமார தரிசித்து, லிங்கத்திலிருந்த தங்க ரேகையையும் தரிசித்து, கோவிலில் வழங்கப்படும் உணவினை உண்ட பின் இரண்டு மணி நேரம் ஓய்வெடுத்தோம். மாலை 4½ மணிக்கு சுமார் ½ மணி நேரம் நடந்த சிறப்பு அபிஷேக பூஜை தரிசித்தோம். மீண்டும் மாலை 7.30 மணிக்கு தேவியின் புறப்பாடு காணச் சென்றோம். கொடிமரத்திலிருந்து பல்லக்கு; அதன் பிறகு சிறிய ரதம்; பின் தங்க ரத புறப்பாடு என அனைத்தையும் தரிசித்து, கஷாய பிரசாதத்தையும் வாங்கி வந்தோம். அப்பிரசாதம் மிகவும் பிரசித்தி பெற்ற சுக்கு, பனங்கற்கண்டு பானகம்தான். ஆதிசங்கரரின் கால் வலி நீங்க

அம்பிகை கொடுத்த கஷாயம். அதுவே இப்போதும் இங்கு இரவு பிரசாதமாக வழங்கப்படுகிறது.

கோல மகரிஷி சிவனை நோக்கி கடும் தவம் புரிந்து, சிவபெருமான் திரிமூர்த்தியாய், திரிசக்தியாய் இங்கு தோன்றி மக்களுக்கு நலம் அளிக்க வரம் வாங்கினார். பரமன் சுயம்புவாய் அங்கு எழுந்தருள, அவர் மேனியில் இருக்கும் தங்க ரேகையில் மூன்று மூர்த்திகளும், சக்திகளும் அடக்கம் என்கின்றனர். அம்மலையில் அசுரன் ஒருவனும் மனிதனாலோ, விலங்குகளாலோ, பறவைகளாலோ அழிவுவரக்கூடாது என்ற வரம் கேட்க சிவனை நோக்கி தவமிருக்க, தேவர்கள் சரஸ்வதி தேவியை வணங்க, அவளும் அந்த அசுரனின் பேசும் சக்தியை அழித்து விட, சிவன் நேரில் தோன்றியும் அவனால் எந்த வரத்தையும் வாங்க இயலவில்லை. கன்னடத்தில் மூகா எனில் ஊமை. ஆகவே இவ்வசுரன் மூகாசுரன் எனப்படுகிறான். அவனின் கொட்டம் அதிகமாக, தேவி அவனை அழிக்க முடிவு செய்கிறாள். முடிவு நெருங்கி விட்டதை உணர்ந்த அசுரன் உனது பெயர் நிலைத்திருக்கும் வரை எனது பெயரும் நிலைக்க வேண்டும் என்ற வரத்தினைப் பெற்றதால், தேவி கொல்லூர் மூகாம்பிகை ஆனாள். தேவி அவனை வதம் செய்த இடம் குடசாத்ரி மலை. கொல்லூரிலிருந்து இரண்டு மணி நேர ஜீப் பயணம் மேற்கொண்டால், வதம் செய்த இடம் அடையலாம். கடைசி 1 மணி நேரப் பயணம் மிகுந்த குலுக்கலாக அமைந்தது. மலை மீது மூல மூகாம்பிகை, காலபைரவர், ஆதிசங்கரர், மகாகாளி கோவில்கள் உள்ளன. இன்னும் 2 கி.மீ. மலையேறினால், ஆதிசங்கரருக்கு தேவி காட்சி கொடுத்த இடம் உள்ளது. இம்மலையில் மூகாசூரனை தேவி வதம் செய்த சூலம் பூமிக்கடியில் புதைந்து காணப்படுகிறது. 2340 ஆண்டுகள் பழமையான அந்த சூலம் இதுவரை துருப் பிடிக்காமல் 30 அடி உயரத்துடனும், 4 அங்குலம் அகலமுமாக உள்ளது. ஆதி சங்கரர் தவமிருந்து தேவியை தனது ஊரில் கோவில் கொள்ள வேண்டுகிறார். தேவி பின்னால் வர சங்கரர் முன்னே செல்கிறார். கேட்டுக்கொண்டிருக்கும் சலங்கை ஒலி நின்று விடவே, தேவி அங்கேயே குடிகொண்டுவிட்டாள். அதுவே கொல்லூர் ஆகும். இது தேவியின் தொண்டை பாகம் விழுந்த சக்தி பீடமாகும்.

அடுத்து நாங்கள் சிருங்கேரி சாரதா பீடம் சென்று, சாரதா தேவியை வணங்கினோம். கி.பி. 8ஆம் நூற்றாண்டில் ஆதி சங்கரரால் நிறுவப்பட்ட நான்கு அத்வைத ஞானபீடங்களில் ஒன்றாகும். இங்கு சாரதாதேவி சந்தன சிலையாக அருள்பாலிக்கிறார். பின்னரே இவர் தங்க சிலையாக பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளாள். முனிவர் ரிஷ்யசிங்கர் தவம் செய்த இடமாகிய இவ்விடம் ரிஷ்யசிருங்ககிரி ஆகி மருவி சிருங்கேரி ஆயிற்று. கோவில் 9 நிலை ராஜகோபுரத்துடன் விளங்குகிறது. உலகிலேயே மிகப்பெரிய வீணை இங்கு உள்ளதாக கேள்விப்பட்டோம். மிக அழகான தேவிக்கு அருகே தனிச் சந்நிதியில் தோரண கணபதி அருள்பாலிக்கிறார். மிகுந்த சிற்ப வேலைப்பாடுகள் நிரம்பிய கோயில். அருகில் பழமையான ரத வடிவிலான வித்யாசங்கர கோவில் உள்ளது. இங்கு உள்ள 12 தூண்கள் 12 ராசிகளைக் குறிக்கிறது. சூரிய ஒளி அன்றைய தினம் எந்த ராசியோ அத்தூணில் விழுவது போல் அமைக்கப்பட்டிருப்பது அதிசயமாக உள்ளது. சிற்பங்களின் அழகு வார்த்தைகளில் வடிக்க இயலாது. அருகில் ஓடும் துங்க பத்ரையின் பாலத்தைக் கடந்தால், அப்பக்கம் சிருங்கேரி மடம் அமைந்துள்ளது. மாலை 6 மணிக்கு மேல் பொது தரிசனம் உள்ளது. சென்னை திரும்பும் வழியில், இரவு சரவணபெலகோலாவில் தங்கி, அடுத்த நாள் காலை 57 அடி உயர ஒற்றைக்கல் கோமதீஸ்வரர் எனப்படும் பாகுபலியை கீழிருந்தே தரிசித்து, காஞ்சிபுரம் வந்தோம். மறுநாள் காஞ்சி காமாட்சி அம்மன், ஏகாம்பரேஸ்வரர், வரதராஜப் பெருமாள், கைலாசநாதர், சித்ரகுப்தர் கோவில், குமரக்கோட்டம் தரிசித்து, இரவு சென்னை திரும்பினோம். அருமையாக அமைந்த இப்பயணத்திற்கு நாங்கள் எங்கள் குரு அச்சுதானந்தா சாயி, அவரது சீடர் காசர்கோடு D.S.P. மோகன்தாஸ் மற்றும் அவர்கள் குடும்பத்தினருக்கும், உடுப்பியில் எங்களுக்கு தரிசனத்திற்கும், உணவிற்கும் உதவிபுரிந்த சீடர் திரு. ரவிபிரசாத் மற்றும் அவர்கள் குடும்பத்தினருக்கும் எங்களின் மேலான வணக்கங்களும்! நன்றிகளும்!

– திருமதி. மைதிலி வைத்தியநாதன், குடந்தை

**9486260667**

## குருவை விஞ்சிய சிஷ்யன்

தொடர்ச்சி...

பல ஆண்டுகளுக்கு பின்னர் ஒரு நாள் ராமானுஜர் வைணவப் பேருரை நிகழ்த்திய போது யாதவப் பிரகாசரின் தாய் கேட்க நேர்ந்தது.

இராமானுஜரின் தெளிவான பேச்சைக் கேட்ட தாய் அமைதியில்லாத மனநிலையில் இருந்த யாதவப் பிரகாசரிடம், நீ இராமானுஜனிடம் செல், உனக்குத் தீர்வு ஏற்படும் எனக் கூற அவரும் மனக்கிலேசம் நீங்கி, இராமானுஜரின் மடத்துக்குச் சென்றார். இராமானுஜரிடம் கண்ட மேதாவிலாசத்தைக் கண்டு யாரும் எதிர்பாராத நிலையில் அவரின் கால்களில் விழுந்து வணங்க முற்பட்டார். அதனைக் கண்ட இராமானுஜர் அவரைத் தடுக்க, யாதவப் பிரகாசர் தன்னை சீடனாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டினார். இராமானுஜர் உடனே அவருக்கு பஞ்ச சமஸ்கார உபதேசம் செய்து, 'கோவிந்த ஜீயர்' என்ற திருநாமத்தினைச் சூட்டினார். மேலும் அவரிடம் துறவிகளின் கடமைகள் குறித்து நூல் எழுதுமாறு கேட்க யாதவப் பிரகாசரும் 'யதிதர்ம சமுச்சயம்' என்ற நூலை எழுதினார்.

அடுத்து இராமானுஜர் திருவரங்கத்திலிருந்த போது திருக்கோட்டியூரில் உள்ள திருக்கோட்டியூர் நம்பிகளிடம் எட்டெழுத்துமந்திரத்தின் உட்பொருளைத் தெரிந்துகொள்ளச் சென்றார். இராமானுஜரை பலமுறை திருப்பி அனுப்பியவர் பதினெட்டாவது முறையாக வந்தபொழுது அவரை தனிமையில் அழைத்து 'ஓம் நமோ நாராயாணாய' என்ற மந்திரத்தின் உட்பொருளை இரகசியமாக உரைத்தார். இதனை யாரிடமும் உரைக்கக்கூடாது எனக் கட்டளையும் இட்டார். ஆனால் அதனையும் மீறி இராமானுஜர் திருக்கோட்டியூர் கோயிலின் உச்சியில் ஏறி நின்று அங்குள்ள அடித்தட்டு மக்கள் முதல் அனைவரையும் அழைத்து, எட்டெழுத்து மந்திரத்தின் உட்பொருளை அனைவருக்கும் உணர்த்தி மோட்சமும் பரகதியும் அடையச் செய்தார். அதனை அறிந்த நம்பிகள் இராமானுஜரை அழைத்து குருவின் ஆணையை மீறியதற்கு என்ன தண்டனைத் தெரியுமா ? எனக் கேட்க எனக்கு நரக தண்டனைதான் கிடைக்கும் என்பது தெரியும் என்றார். ஆனால் நான் நரகத்திற்குச் சென்றாலும் கேட்டவர்கள் அனைவரும் மோட்சமும் பரகதியும் அடைவார்கள் அல்லவா ? நான் அதனை ஏற்றுக் கொள்கிறேன் என்றார். இதனைக் கேட்ட திருக்கோட்டியூர் நம்பி தன் கோபம் நீங்கி, அவரின் உயர்ந்த எண்ணத்தைக் கண்டு வியந்து சீடரை 'நண்பரே' என்று அழைத்ததோடு, உன்னால் அம்மந்திரம் மேலும் சிறந்ததால் இனி அது 'இராமானுஜ தரிசனம்' என்றே அழைக்கப்படும் எனவும் கூறி மகிழ்ந்தார்.

திருவரங்கம் வந்த திருக்கோட்டியூர் நம்பிகள் ஆளவந்தாரின் சீடராகிய திருமலையாண்டானிடம் இராமானுஜருக்கு நம்மாழ்வாரின் திருவாய்மொழியின் உள்ளார்ந்த அர்த்தங்களைக் கூறுமாறு கேட்டுக் கொண்டார். அவரும் மகிழ்ச்சியுடன் இராமானுஜருக்கு திருவாய் மொழிப் பாடங்களை நடத்தத் தொடங்கினார். அவரிடம் பல விளக்கங்களைக் கேட்ட இராமானுஜர் தான் பல உட்பொருள்களை சொல்லவும் செய்தார். திருமலையாண்டான் ஆச்சரியப்பட்டாலும் ஒரு சில நேரத்தில் வெறுப்படையவும் செய்தார். அதனால் அவர் திருக்கோட்டியூர் நம்பிகளிடம் சென்று இராமானுஜரின் செயல்களைக் கூறி பாடம் நடத்த மறுத்தார்.

அப்பொழுது திருக்கோட்டியூர் நம்பிகள் அவரிடம் இராமானுஜர் மறுத்துப் பேசுவதாக தாங்கள் நினைக்க வேண்டாம். அவர் ஒரு ஞான சங்கமமாக விளங்குபவர். அனைத்தும் அறிந்த கிருஷ்ணபகவானும் குரு சாந்தீபணி முனிவரிடம் முறையாக வேதக் கல்வியைக் கற்றார். அதுபோலத் தான் இதுவும் என விளங்கினார். இராமானுஜருக்குத் தெரியாதது எதுவும் இல்லை. எனவே, குரு சிஷ்யன் என்ற முறையில் நீங்கள் பாடம் நடத்துங்கள் எனக் கூற, திருமலையாண்டானும் இராமானுஜருக்கு உரை விளக்கம் கொடுத்து நிறைவு செய்தார்.

இவ்வாறு இராமானுஜர் தான் யாரிடம் கற்கச் சென்றாலும் தன் மேதா விலாசத்தால் அவர்களிடம் கற்பதோடு அமையாமல், அதன் உள்ளார்ந்த பொருள்களைக் கூறி குருவை விஞ்சிய சிஷ்யனாக விளங்கினார். தன் அறிவாற்றலினால் தன் குருவையே சிஷ்யராகவும் ஆக்கிக்கொண்டு ஆச்சரியமூட்டினார் என்றால் அது மிகையாகாது.

– அரங்க. தியாகராசன்

காந்திநகர், மயிலாடுதுறை.

9486718234

# அறிவியல் அறிவோம்

## உரங்களின் வரலாறும் இரண்டாம் உலகப் போரும்

அக்ரி. த. இராமலிங்கம்

முன்னாள் கூடுதல் இயக்குநர்

19.03.2026 மற்றும் 20.03.2026 தேதிகளில் வெளிவந்த தினமலர் நாளிதழ்களில் இந்தியாவின் உரத் தேவை, கையிருப்பு, உரங்களின் இறக்குமதிக்கு நாம் சார்ந்துள்ள அயல்நாடுகளின் விபரங்கள், மேற்காசிய நாடுகளில் நிலவும் போர் பதற்றம் காரணமாக, திரவ எரிவாயு இறக்குமதியில் உள்ள சிக்கல், அதன் விளைவாக நம் நாட்டு உர உற்பத்தியில் பாதிப்பு ஆகிய விபரங்கள் மிகப்பெரிய அளவில் செய்திகளாக வெளிவந்துள்ளது. அதன் தொடர்ச்சியாகவே இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. இக்கட்டுரையின் நோக்கம், வாசகர்கள் குறிப்பாக வேளாண் பெருமக்கள், ஆதிகாலம் தொட்டு தற்காலம் வரை உரங்களின் பயன்பாட்டை அறிந்துகொள்வதற்காக மட்டுமே. செயற்கை உர பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக அல்ல என்பதை அறியவும்.

### உரங்களின் வரலாறு:

செயற்கை உரங்கள் (Fertilisers) பயன்பாட்டிற்கு வருவதற்கு முன் Manure என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. தமிழ் மொழியில் எரு என்று சொல்லப்படுகிறது. எரு மற்றும் உரம் என்ற இரு சொற்களுக்கும் மிகுந்த வேறுபாடு உள்ளது. பயிருக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை கொண்ட, இயற்கையாக மாட்டுக்கொட்டகையிலிருந்து பெறப்படும் கழிவுகள், கம்போஸ்ட் மற்றும் கோழிப்பண்ணை கழிவுகள் போன்ற பொருட்கள் எரு என்ற பொருளில் பயன்படுத்தப்படுகின்றன. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, கால்நடைகளின் சாணங்கள்/கழிவுகள் இருந்த இடங்களிலும், சாம்பல் (Pot Ash) குவிக்கப்பட்ட இடங்களிலும், பயிர்களின் வளர்ச்சி நன்றாக இருந்ததை உழவர்கள் அறிந்தார்கள். பிறகு மாட்டுத் தொழுவத்தின் கழிவுகள், எலும்புத் துகள்கள் (Bone Meal), மனிதக் கழிவுகள் (Night Soil) மற்றும் தென் அமெரிக்காவை சுற்றியுள்ள தீவுகளில் இருந்து கிடைத்த பறவைகளின் எச்சங்கள் (Guano) போன்றவை பயிர்களின் வளர்ச்சிக்காக பயன்படுத்தப்பட்டன. காலப்போக்கில், பயிரிடப்பட்ட நிலப்பரப்பு அதிகமாகியதால், மேற்கண்ட “எரு” என்று சொல்லப்பட்ட பொருட்கள் தேவையான அளவு கிடைக்காததால் அறிவியல் வல்லுநர்கள், பயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச் சத்துக்கள் மற்றும் அவற்றை தன்னகத்தேயுடைய உரம் (Fertilizer) என்று சொல்லப்படுகிற பொருட்களை தயாரிப்பதில் ஆர்வம் காட்டினர். வான் லீபிக் என்ற வேளாண் வேதியியலர் 1840ஆம் ஆண்டு பயிர்களுக்கு நைட்ரஜன், பாஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் என்ற ஊட்டச்சத்துக்கள் தேவைப்படுகின்றன என்பதை கண்டறிந்து, அதற்கான உரங்களை தயாரிப்பதில் ஆர்வம் காட்டினார். அதன் காரணமாக அவர் Father of Fertilizer, Father of Agricultural Chemistry என்று போற்றப்பட்டார். 1842ஆம் ஆண்டு சர்ஜான் பென்னட் லாயஸ் என்பவர் இயற்கையாக கிடைத்த பாஸ்பேட் படிமங்களை, கந்தக அமிலத்துடன் சேர்த்து சூப்பர் பாஸ்பேட் என்ற உரத்தை தயாரித்து வேளாண்மையில் பயன்படுத்தச் செய்தார். இன்று நாம் சிறந்த பொருட்கள் அல்லது மனிதர்களை சிறப்பிக்க Super என்ற அடைமொழியை பயன்படுத்துகிறோம். Super என்ற சொல் 1842ஆம் ஆண்டு ஒரு வேளாண் வல்லுநரால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

### நைட்ரஜன் உரங்களுக்கு வித்திட்ட உலகப்போர்:

இரண்டாம் உலகப் போர் காலத்தில் Nitrogen Bomb மற்றும் வெடி பொருட்கள் (Explosives) தயாரிப்பதற்காக அம்மோனியம் நைட்ரேட் என்ற பொருள் மிக அதிக அளவில் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டன. இரண்டாம் உலகப்போர் முடிந்தபின் அபரிமிதமான அம்மோனியம் நைட்ரேட் கிடங்குகளில் இருந்தன. அதே காலகட்டத்தில், வேளாண் வல்லுநர்கள், அம்மோனியம் நைட்ரேட் பயிர்களின் வளர்ச்சிக்கு மிகவும் உதவக்கூடிய பொருள் என்று கண்டறிந்தார்கள். ஆனால், அம்மோனியம் நைட்ரேட் வெடிக்கும் (Explosive) தன்மை கொண்டது. ஆகையால் கையிருப்பில் இருந்ததை மிகுந்த கவனத்துடன் வேளாண்மைக்கு பயன்படுத்தப்பட்டது. அதன்பிறகு அ.நைட்ரேட் உற்பத்தி செய்த தொழிற்சாலைகள், அம்மோனியம் சல்பேட், அ.நைட்ரேட் போன்ற நைட்ரஜன் சத்து தரக்கூடிய உரங்களை தயாரிக்கத் தொடங்கின.

### இந்தியாவில் உரங்களின் வரலாறு:

இங்கிலாந்து நாட்டில், 1842ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட சூப்பர் பாஸ்பேட் என்ற உரம்

63 ஆண்டுகளுக்குப் பிறகு 1906ஆம் ஆண்டு இந்தியாவில் தமிழ்நாட்டின், அன்றைய வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள இராணிப்பேட்டை என்ற ஊரில் முதன்முதலாக தயாரிக்கப்பட்டது. அதன்பிறகு 27 ஆண்டுகளில் மற்ற உரங்களின் தயாரிப்பில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. 1933–ல் அம்மோனியம் சல்பேட், 1941–ல் யூரியா, 1967–ல் DAP, 1968–ல் NPK Complex உரங்களின் உற்பத்தி தொடங்கின. இடைப்பட்ட காலங்களில் வேறு சில உரங்களும் தயாரிக்கப்பட்டன.

### இந்தியாவில், உரப் பயன்பாட்டின் இன்றைய நிலை:

இந்தியாவில் அதிக அளவில் பயன்படுத்தப்படும் உரங்களான யூரியா, டை அம்மோனியம் பாஸ்பேட், பொட்டாஷ், சூப்பர் பாஸ்பேட், NPK Complex போன்ற உரங்களின் மொத்த பயன்பாடு 2009–2010–ஆம் ஆண்டில் 523 லட்சம் டன்களாக இருந்தன. 2022–23ஆம் ஆண்டில் மொத்த உரங்களின் பயன்பாடு 648 லட்சம் டன்களாக உயர்ந்தன. பதிமூன்று ஆண்டுகளில் 125 லட்சம் டன்கள் பயன்பாடு அதிகரித்துள்ளது. 2026–27ஆம் ஆண்டின் தேவை 670 லட்சம் டன்கள் என மதிப்பிடப்பட்டுள்ளன. நம் நாட்டில் இயற்கை வேளாண்மை என்பது கடந்த 25 ஆண்டுகளாக பேசப்பட்டு, சிறிய அளவில் செய்யப்பட்டு வந்தாலும், உரப்பயன்பாடு அதிகரித்துக் கொண்டே இருக்கிறது என்பதை மேற்கண்ட புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

ஆதாரம்: கூகுள் தேடல்
மற்றும் கல்லூரி படிப்பு

## போரின் தாண்டவம்

மனிதா!
ஒரு தேசத்தைக் கைப்பற்ற
மனித உயிர்களை அழிக்கிறாய்!
மனிதத்தைப் பறிக்கிறாய்
துப்பாக்கி ஏந்தும் உனக்கு
எப்போது புரியப் போகிறது
இந்த பூமி பூக்களின் தேசமென்று
போர் விமானங்கள் பறக்கும் வீதி
வெள்ளைப் புறாக்கள் பறக்கும் வீதி அன்றோ!
நீர்மூழ்கி கப்பல்களின் சத்தத்தில்
நீரில் வாழும் மீன்களின் அழுகை
உனக்கு கேட்காமல் போனதோ!
மரணம் என்பது வாழ்வின் நியதி
மரணம் என்பது எமனின் தொழில்
போர்த் தொழில் புரிந்து மனித உயிரைப்
போக்குவது நியாயமா?
நீ வீசும் குண்டுகள் இலக்கை மட்டும் அழிப்பதில்லை;
நீள் விசும்பின் இலட்சியங்களைச் சிதைப்பதை
நீ ஏன் அறியாமல் போனாய்?
கருவில் இருந்து பிறக்கும் சிசுவின் அழுகையும்
கருகி இறக்கும் குழந்தையின் அழுகையும் ஒன்றா?
இறைவன் நினைத்தான்! நினைப்பு சரிதான்!
ஒவ்வொரு பொருளும் வேறுவேறு தேசத்தில்
கிடைப்பின்
ஒவ்வொரு தேசமும் கைகோர்க்குமென்று!
நடப்பதென்னவோ அவனே எதிர்பாராதது!
இயற்கைப் பேரிடரை சமாளிக்கலாம்
இந்த இதயப் பேரிடரை சமாளிப்பது எப்படி?
நெஞ்சம் கனக்கிறது; புலம்புகிறது; எரிகிறது;
எரிபொருள் இல்லாமல்!

கவலையுடன்,
செந்தில்நாதன்
9360276012



தோற்றம் : 04.05.1967

## வருந்துகிறோம்

பெருந்தோட்டம் தெய்வத்திரு. பால வேலாயுதம் பிள்ளை – சரஸ்வதி அவர்களின் இளைய மகன் **மோகன்** அவர்கள் 29–04–2026 புதன் கிழமை காலை 6 மணி அளவில் இயற்கை எய்தினார்.

இப்படிக்கு
**மோ. விக்னேஷ்**
மனைவி **மோ.சித்ரா**
சகோதரர் **பா. ரமேஷ்**

## குழந்தைகளுக்கு நல்ல உணவு பழக்கம்

A. Rajarethinam, Porur, Chennai. 9444224366

நம் நாட்டின் பல பகுதிகளில் சில குழந்தைகள் பருமனாக இருப்பதைக் காண்கிறோம். குழந்தைகளின் உணவு பழக்கங்களை முறைப்படுத்த வேண்டும். குழந்தை சுமார் ஒரு வருடம் முதல் இரண்டு வருடம் வரை தாய்ப்பால் குடிக்கிறது. அப்போது உடல் நலமுடன் இருக்கிறது. தாய்ப்பாலில் உள்ள என்சைம்கள் குழந்தையின் உடல் அமைப்பைக் காத்து, நோய் தடுப்பாற்றலைக் கொடுக்கிறது.

பின்னர் பசும்பால், மற்ற ஆகாரம் கொடுக்க ஆரம்பிக்கும் போது ருசிக்காக அதிகம் சர்க்கரை போடுவது நல்லதல்ல. குழந்தை சாப்பிடும் போது டி.வி. பார்ப்பதை தடுக்க வேண்டும். டி.வி. பார்த்துக்கொண்டே அளவுக்கு அதிகமாக சாப்பிட்டு விடும். குழந்தைக்கு நொறுக்குத்தீனி கொடுக்காதீர்கள். குழந்தையை நன்றாக ஒரு மணி நேரமாவது ஓடி ஆடி விளையாட விடுங்கள். அதேபோல் நல்ல தூக்கமும் அவசியம்.

பாஸ்ட் புட், பீட்ஸா, சிப்ஸ், பர்கர், ஐஸ்கிரீம், சாக்லெட் இவற்றை அதிகம் வாங்கிக் கொடுத்தால் குழந்தை பருமனாவதற்கு வாய்ப்பு அதிகம். பருப்பு வகைகள், அளவாக அரிசி அல்லது கோதுமை, காய்கறிகள், பழங்கள், பால், தயிர், மோர், கீரை போன்ற உணவுப் பொருள்களை குழந்தைகளுக்கு கொடுத்து வந்தால் உடல்நலமுடன் இருக்கும். உடல் எடை தேவைக்கு மேல் அதிகரிக்காது.

வீட்டில் செய்த முறுக்கு, தட்டை, சுண்டல், பொட்டுக்கடலை, நிலக்கடலை, பேரீட்சை போன்றவற்றை மாலை நேரங்களில் கொடுக்கலாம். கேழ்வரகு, தானியம், ஓட்ஸ் போன்றவற்றை கஞ்சி வைத்து கொடுக்கலாம்.

உடலில் அதிகமான கொழுப்பு சேர்வதை தடுக்கவேண்டும். முளை கட்டிய தானியங்களை குழந்தைகளுக்கு கொடுக்கலாம். பாதாம், முந்திரி, திராட்சை போன்றவை மிகவும் நல்லது. வேகவைத்த மக்காச்சோளம் அளவோடு கொடுப்பது, ஆப்பிள், வாழைப்பழம், வெள்ளரிக்காய் கொடுப்பது குழந்தைகள் நலமுடன் இருக்க உதவும். எந்த ஸ்நாக்ஸ் கொடுத்தாலும் உப்பு, இனிப்பு, கொழுப்பு சத்து குறைவாக இருக்க வேண்டும்.

குழந்தைகள் தேவையான அளவு தண்ணீர் குடிக்க வேண்டும். ஸ்நாக்ஸ் கொடுக்கும் நேரம் கவனிக்கப்பட வேண்டும். ஸ்நாக்ஸ் சாப்பிடுவது ரெகுலர் சாப்பாட்டு நேரத்துக்கு மிக நெருக்கமாக இருக்கக்கூடாது. ஸ்நாக்ஸ் கொடுக்கும் போது ஜூஸ், மோர், இளநீர் போன்றவற்றைக் கொடுக்கலாம்.

இத்தகைய உணவுப் பழக்கங்களைக் கடைப்பிடித்து, அவ்வப்போது பெற்றோர்கள் குடும்ப மருத்துவர்களிடம் ஆலோசனை பெற்று குழந்தைகளை வளர்த்தால், அவர்கள் உடல்நலமுடன் வளர்வார்கள்.

## வள்ளுவனும் வாழ்க்கை தத்துவமும்

வள்ளுவன் உலகிற்கு அளித்த நன்கொடை
அறம்,பொருள் இன்பம் தந்த திருக்குறள்
வாழ்க்கை நெறியை வகையாய் தந்தான்
காலமும் கடவுளும் கை கொடுத்தால்
குடிசையில் வாழ்பவன் குபேரன் ஆகலாம்
உழைப்பு ஊக்கம் உண்மை இருந்தால்
படிப்பறிவில்லா பாமரனும் அறிஞன் ஆகலாம்
அரசியல் வாதி அமைச்சன் ஆகலாம்
நடித்துவாழும் நடிகன் நாட்டை ஆளலாம்
நாளும் கோளும் நன்மை செய்தால்
குருவி கூட பருந்தா கலாம்
இயற்கை யைப் படைத்த இறைவன்
இன்பம் துன்பம் சேர்த்துப் படைத்தான்
எழுபிறப்பில் சிறந்தது மனித பிறவி
ஏழை எளியோருக்கு அன்ன மிட்டு
அன்புகாட்டி பசிபோக்கும் அட்சய பாத்திரமாய்
பண்புடன் நடந்தால் உலகுஉனைப் போற்றும்
நாளைய உலகில் நல்லதோர் இடம்பிடிப்பாய்!

ஆக்கம்: மாணிக்க. வசந்தா, M.A.,B.Ed.
மயிலாடுதுறை.

## அடியவற்காய் மண் சுமந்த அண்ணல்... அமைச்சரை ஆட்கொண்ட ஐயன்!

இறைவன் மனிதனைத் தேடி வருவதும், மனிதன் இறைவனைத் தேடி அலைவதும் ஆன்மீகத்தின் இரு துருவங்கள். ஆனால், மதுரையின் அமைச்சராக இருந்த வாதவூரார் விஷயத்தில், இறைவனே குருவாக வந்து ஆட்கொண்டார். குதிரை வாங்கச் சென்றவர் சிவஞானத்தைப் பெற்றுத் திரும்பியதும், பிட்டுக்கு மண் சுமந்த பரமனின் திருவிளையாடலும், சைவ சமயத்தின் அழியாத பொக்கிஷங்கள் அந்த மகத்தான பயணத்தின் தொகுப்பு இது.

1. திருப்பெருந்துறையில் குரு தரிசனம்

பாண்டிய மன்னன் அரிமர்த்தன பாண்டியனிடம் தலைமை அமைச்சராக இருந்த வாதவூரார், ஒருமுறை குதிரைகள் வாங்குவதற்காகப் பெரும் நிதியுடன் அனுப்பப்பட்டார். வழியில் திருப்பெருந்துறை (ஆவுடையார்கோவில்) என்ற இடத்தை அடைந்தபோது, குருந்த மரத்தின் நிழலில் வீற்றிருந்த ஞானாசிரியர் ஒருவரை அவர் தரிசித்தார்.

அவர் சாதாரண குரு அல்ல; வாதவூராரை ஆட்கொள்ள வந்த சிவபெருமானே ஆவார். இறைவனின் திருமுகம் கண்ட மாத்திரத்திலேயே உலகப் பற்றுகளைத் துறந்த வாதவூரார், குதிரை வாங்க வைத்திருந்த பணத்தை அப்படியே கோயில் திருப்பணிக்கும். சிவனடியார்களுக்கும் செலவிட்டு அங்கேயே தங்கிவிட்டார்.

2. நரியைப் பரியாக்கிய திருவிளையாடல்

நிச்சயித்த நாளில் குதிரைகள் வராததால் மன்னன் கோபமுற்று வாதவூராரைச் சிறையிலிட்டான். தன் பக்தனைக் காக்க சிவபெருமான் ஒரு பேரதிசயத்தைச் செய்தார். காட்டில் இருந்த நரிகளை எல்லாம் உயர்ந்த ரகக் குதிரைகளாக (பரி) மாற்றி, தாமே குதிரை வீரனாக வந்து மன்னனிடம் ஒப்படைத்தார். ஆனால், அன்றிரவே அவை மீண்டும் நரிகளாக மாறி ஊளையிட்டுக் கொண்டு ஓடின. இதனால் ஆத்திரமடைந்த மன்னன், வாதவூராரைச் சுடுமணலில் நிற்க வைத்துத் தண்டித்தான்.

3. பிட்டுக்கு மண் சுமந்த அற்புதம்

தன் அடியாரின் துயரம் கண்டு சிவபெருமான் வைகை ஆற்றில் வெள்ளம் வரச் செய்தார். ஆற்றின் கரையை அடைக்க வீட்டுக்கு ஒருவர் வரவேண்டும் என மன்னன் ஆணையிட்டான். 'வந்தி' என்ற மூதாட்டி சிவபக்தை; அவளுக்கு உதவ யாரும் இல்லாததால், சிவபெருமானே ஒரு கூலியாளாக அவளிடம் வந்தார்.

அவர் சரியாக வேலை செய்யாமல், வந்தி கொடுத்த உதிர்ந்த பிட்டை உண்டுவிட்டு உறங்கிக் கொண்டிருந்தார். இதைக் கண்ட மன்னன் பிரம்பால் அடித்தான். அந்த அடி பிரபஞ்சத்தின் அனைத்து உயிர்கள் மீதும் விழுந்தது இறைவனின் இந்தத் திருவிளையாடலை உணர்ந்த மன்னன், வாதவூராரைத் தண்டனையிலிருந்து விடுவித்தான்.

4. பதிகமும் அதன் பொருளும்

மதுரையில் இறைவன் நிகழ்த்திய உன்னதமான திருவிளையாடல்களைப் போற்றி, பரஞ்சோதி முனிவர் அருளிய திருவிளையாடல் புராணத்தின் கருத்துக்களை விளக்கும் புகழ்பெற்ற தனிப்பாடல் இதோ

''நரியைக் குதிரை ஆக்கிய நன்மையும்
பிட்டு நேர்பட மண் சுமந்த கூலியும்
இட்டமாய் உமைத் தந்தது ஓர் ஈசனே''

பாடலின் பொருள்:

நரியைக் குதிரை ஆக்கிய நன்மை: பாண்டிய மன்னனுக்காகக் காட்டில் இருந்த நரிகளை எல்லாம் குதிரைகளாக மாற்றி, அடியாரைக் காத்த இறைவனின் பெரும் கருணையை இது குறிக்கிறது.

பிட்டு நேர்பட மண் சுமந்த கூலி: வைகை ஆற்றில் வெள்ளம் வந்தபோது, ஏழை மூதாட்டி வந்திக்காகச் சாதாரணக் கூலியாளாக வந்து, அவள் கொடுத்த 'பிட்டை'க் கூலியாகப் பெற்று மண் சுமந்த இறைவனின் எளிமையை இது விளக்குகிறது.

இட்டமாய் உமைத் தந்தது ஓர் ஈசனே. ''என் அன்பிற்குரிய இறைவனே எளியேனாகிய எனக்காக இவ்வளவு அற்புதங்களைச் செய்து, உன்னையே எனக்குத் தந்து ஆட்கொண்டாயே!'' என்று மெய்சிலிர்க்கிறார் மாணிக்கவாசகர்.

கீர்த்தித் திருஅகவல் –

''ஆங்கது தன்னில் அடியவட்காகப் பாங்காய் மண் சுமந்து அருளிய பரிசும்...''

திருச்சிற்றம்பலம்

– சிவ மை. அகிலா
திருத்தூங்கானைமாடம் (பெண்ணாகடம்)
9715698242

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்:
16.6.1960

மறைவு:
9.5.2025

# M. மாலதி

பிறந்த வீட்டில் உடன் பிறந்தோருக்கு
தாயாய் திகழ்ந்தாய்
புகுந்த வீட்டை பொறுப்பான சேவையால்
பொலிவுறச் செய்தாய்!
கட்டிய கணவனை கண்ணிமைப் போல்
காத்திருந்தாய்!
பெற்ற செல்வனை அவையில்
முந்தியிருக்கச் செய்தாய்!!
என்றும் எங்கள் நினைவில் நீங்காது
நிலைத்திருப்பாய்
அம்மா... அம்மா... அம்மம்மா...!
ஆயிரம் பேர் அருகில் இருந்தாலும் கூட.. ? நீயில்லையே அம்மா!
இனிய கற்றத் தருணங்கள் வருமா தாயே...
ஈதலுடன் காத்தரவணைத்த அன்னையே...!
உயிர் மூச்சு நீ அம்மா...
ஊர் போற்றும் தெய்வமம்மா...!
எங்களை ஆளாக்கிய கருணையே...
ஏமாற்றினாய் எங்களை... ஆனாலும்
ஐயமின்றி காக்கும் குலசாமியே...!
ஓராண்டு காலம் உருண்டு மறைந்தாலும்...
ஔடதமாய் உன் நினைவுகள்...
அஃதே வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இளந்தோப்பு K. **மணியன்** அவர்களது துணைவியார்

தகப்பனார்: **வாசுதேவபிள்ளை,** இலையூர்
தாயார்: **ஜெயலட்சுமி**
மாமனார்: **கல்யாணம்பிள்ளை**
மாமியார்: **விசாலாட்சி ஆச்சி,** இளந்தோப்பு

மகன்: **M. சுகுமார்,** Agri. Dept.
மருமகள்: **S. கிரிஜா,** ஆசிரியர்
பேரன்கள்: **S. தியானேஷ், S. நிக்லேஷ்,** இளந்தோப்பு
6380955843



Kalyan Grand is a 3 Star Business Class Hotel, well equipped with modern amenities that blend comfort with functionally to provide comfortable, restful stays.

KALYAN GRAND
a business hotel

**108 Rooms & Suites | 03 Banquet Halls**

**[For Weddings & Receptions, Birthday Parties and Corporate Events]**

Ph: 044 66289999 | Mob: 7812009999
reservations@kalyangrand.com | www.kalyangrand.com




**Thiruvasantham**
PURE VEG

**A Traditional South Indian Pure Vegetarian Restaurant**

**Authentic Indian Sweets, Savouries and Outdoor Catering**

Ph: 044 22752999 | Mob: 9884092244
hotelthiruvasantham@gmail.com | www.thiruvasantham.com

No. 247, GST Road, Vandalur, Chennai, Tamil Nadu - 600048
(Adjacent to Kilambakkam New Mofussil Bus Terminus)



Flats for Sale
Best Features:
Premium Location
24x7 CCTV
Safety Gates
Security Room
Car Parking
Lift Facility
No: 10, Venkateshwara Nagar, Kauveri Street, (Near Ganesh Theater), Anakaputhur, Chennai
91768 92579 | 87787 60228

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்:
**13.07.1964**

மறைவு:
**11.03.2026**

கடலூர் மாவட்டம், திருமுட்டம் வட்டம், மழவராயநல்லூர் கிராமத்தை சேர்ந்த
தெய்வத்திரு.விச்சுட சம்பந்தம் பிள்ளை (மணியார்) அவர்களின் மகன்

## திரு S. சத்தியநாராயணன் பிள்ளை அவர்கள்

**(அய்யனார் கோவில் நிரந்தர அறங்காவலர்)**

அவர்கள் 11.03.2026 புதன்கிழமை அன்று காலை 7.00 மணியளவில்
இறைவனடி சேர்ந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்ததுடன்தெரிவித்துக்கொள்கிறோம்.
அன்னாரது ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.

**என்றும் உங்கள் நினைவில்**

மனைவி : **S.தனலட்சுமி**

மகள் : **S. வித்யா**
மகன் : **S. விஷ்வ சம்பந்தம்**

சகோதரர் : **S. தியாகராஜன்** மற்றும் **குடும்பத்தினர்.**

**மற்றும் உறவினர்கள்**

“ ஒரு ஆண்டு ஆனாலும் உங்கள் சிரிப்பு, உங்கள் அன்பு எங்கள் இதயத்தில் என்றும் உயிருடன் உள்ளது ”



தோற்றம் :
**12.02.1930**

மறைவு :
**15.04.2025**

## N.விஸ்வநாதன் பிள்ளை

(ஆசிரியர் ஓய்வு)

### முதலாம் ஆண்டு நினைவேந்தல்

**காலம் ஒரு ஆண்டு கடந்தாலும்,**
**கண்ணீர் இன்னும் காயவில்லை...**
**நீங்கள் விட்டுச் சென்ற நினைவுகள்,**
**எங்கள் இதயத்தில் அழியவில்லை...**
**ஒவ்வொரு நாளும் உங்களை நினைக்கிறோம்,**
**ஒவ்வொரு நிமிடமும் உங்களை தேடுகிறோம்...**
**எங்கள் வாழ்வில் நீங்கள் இல்லையென்றாலும்,**
**எங்கள் நினைவில் என்றும் வாழ்கிறீர்கள்...**

மகள்கள் - மருமகன்கள் :

**P.சங்கரவடிவேல்**
**S.கலைச்செல்வி**
**S.சங்கர்**
**S.பத்மா**

**சகுந்தலா விஸ்வநாதன் பிள்ளை**
**V.துரை (எ) இளங்கோவன்**
**சுமதி இளங்கோவன்**
**E.இளஞ்செழியன்**
மேல ஐயனார்குடி.

# கண்ணீர் அஞ்சலி



அதிமானபுருஷன்,
கல்யாணம் பிள்ளை, கோகிலத்தின்
தவப்புதல்வன் **நடராஜனே !**
நெய்தவாசல் தாடிப்பிள்ளை சேது ஆச்சியின் மருமகனே !
வனரோஜாவின் அன்புக்கணவனே !
காமாட்சி, தீபா, உமாவின் தந்தையே !
முத்து, குருமூர்த்தி, மணிகண்டனின் பாசமிகு மாமாவே !
ஐஸ்வர்யா – சதீஷ்
இலக்கியா, விஷ்வேஸ்வரன், இஷாந்தின் தாத்தாவே !
செந்தில்பைப் நிறுவனத்தின் நம்பிக்கை நட்சத்திரமே !
மார்ச் (28.03.2026) அன்று
இம்மண்ணுலகம் விட்டு விண்ணுலகம் சென்றவரே !
உங்கள் ஆன்மா சாந்தி அடையட்டும்.



என்றும் தங்கள் நினைவில் வாழும் :
மனைவி. N. **வனரோஜா**
மயிலாடுதுறை.



மகள் **காமாட்சி – முத்து**
கொண்டாங்குடி.

மகள் **தீபா – குருமூர்த்தி**
செம்மங்குடி.

மகள் **உமா – மணிகண்டன்**
சித்தர்காடு.

# இரண்டாம் ஆண்டு நினைவு அஞ்சலி



தெய்வத்திருமதி. **G.சரஸ்வதி, B.Sc.,**
கண்தான வள்ளல்

மலர்ந்தது 28.11.1949
உதிர்ந்தது 25.06.2024



தெய்வத்திருமதி. **S.லட்சுமி, B.A.,**
கண்தான வள்ளல்

மலர்ந்தது 24.09.1954
உதிர்ந்தது 21.05.2024

**D/o. Dr.K.கணபதி**
Retd. Dean, Annamalai University

நீங்கள் எப்போதும் எங்களுடன்
நாங்கள் எப்போதும் உங்களுடன்...

இங்ஙனம்

**Er.S.கோவிந்தராஜன்,** B.E.,
**Er.G.சிவக்குமார்,** M.S.,
**S.யோகப்பிரியா,** M.Sc.,
செல்வி. **S.வர்ஷா,** B.Sc.,
செல்வன். **S.விஷால்**
**Er.G.மீனா,** B.E.,
**Er.V.K.ராஜேந்திரன்,** M.Tech.,
செல்வி. **R.ரம்யா,** MPH
செல்வன். **R.ராகுல்,** B.S.,

**ம.அ.சீனுவாசன்,** M.Com., M.Ed.,
**Er.S.பிரவின்குமார்,** B.E.,
**Dr.P.ரம்யா,** MBBS, DGO., M.S.,
செல்வன். **P.தீபக்**
**Er.S.சரவணகுமார்,** B.Tech.,
**Er.S.சுவாதிகா,** B.E.,
செல்வன். **S.சித்தார்த்**

நெ.7, திரிபுரசுந்தரி நகர்,
தென்பாதி, சீர்காழி.
செல் : 8220809333


MARUTHI®
LET THE SUN
PAY YOUR
EB BILL
29 YEARS OF EXCELLENCE
29
YEARS OF EXCELLENCE
29 YEARS OF EXCELLENCE
INSTALL SOLAR
ROOFTOP SYSTEM
GET ₹0
ELECTRICITY
BILL
KEY FUTURE
BEST RETURN ON INVESTMENT - 19% TO 26%
NON POLLUTING - REDUCES GLOBAL WARMING.
EXCESS POWER GENERATED CAN BE SOLD.
28
28 YEARS PANEL WARRANTY.
CALL US
98418 28077
www.maruthipower.com
ANANDHAM SELVAKUMAR - CEO

Posted at Egmore RMS, Pathrikachanel, Chennai - 08.
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH( C) / 405 /2025 - 2027 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/2025-2027
Date of Publication : 15th of Every Month
15th / 16th May 2026

# HOTEL KANAKABHISHEGAM

CHOZHA HOTELS

First Hotel From The Temple

***The main festival takes place in the month of Chithirai. On the sixth day, tradition celebrates the Lord destroying Yama and blessing Markandeya with the gift of eternal life.***



***The festival begins in the month of Chithirai (April–May), commencing on the auspicious Magam Star day. For 18 days, the town comes alive with the grandeur of Yama Samharam, where Lord Shiva is celebrated for destroying Yama and blessing the devoted Markandeya with the gift of immortality. On the sixth day, devotees witness the divine darshan of Kalasamhara Murthy, a moment of spiritual significance that marks the triumph of devotion and divine grace.***

Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

**Published by : K. SHANMUGAM,** on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 72/88, Kamaraj Colony 8th Street, (Palayakaran Street) Kodambakkam, Chennai, Tamil Nadu - 600 024. **Editor : S. ANBALAGAN**